www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16—30 நவம்பர் '87

3-1

விலை ரூ: 1

சிய-லெனினிய அரசியல் ஏடு



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்




● ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகளின் அராஜகத்தையும் போலிக் கம்யூனிஸ்டுகளின் துரோகத்தையும் எடுப்பாகவும் துணிச்சலோடும் அம்பலப்படுத்திக் காட்டும் புதிய ஜனநாயகத்திற்கு எனது புரட்சிகர வாழ்த்துக்கள். வீரம்செறிந்த மாபெரும் தெலுங்கானா போராட்டம் என்ற தொடர் கட்டுரை விவசாயிகளுக்கு புரட்சிகர உணர்வூட்டும் வரலாற்றுக் காவியமாகத் திகழ்கிறது. இதழ் எண் 22ல் விமர்சனமும் விளக்கமும் பகுதியில் தனிமனித பயங்கரவாதத்துக்கும் மக்கள் திரள் வழிக்கும் இடையிலான வேறுபாட்டை தெளிவாக்கிக் காட்டியது சிறப்பானது.

மு.நேரு காரப்பட்டு

● இதழ் எண் 22ல் ஈழத்தில்இந்திய ராணுவத்தின் அக்கிரமங்களை அம்பலப்படுத்திக் காட்டியது சிறப்பு. ஆளும்கட்சியின் ஊதுகுழல்களான வானொலி தொலைக்காட்சியின் பொய்ப் பிரச்சாரத்தில் மழுங்கிப்போன மக்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த தங்கள் கட்டுரை வரவேற்கத்தக்கது. சமுதாய—அரசியல் அவலங்களைத் தட்டிக் கேட்கப் போவதாக ஜம்பமடிக்கும் தராசு, ஜூனியர் விகடன் முதலான பத்திரிக்கை அலிகளுக்கு மத்தியில் உண்மையைத் துணிச்சலோடு கூறிய உங்களுக்கு பாராட்டுக்கள்!

மு. தொல்காப்பியன்
சுந்தரபெருமாள்கோயில்

● அக் 16—31 புதிய ஜனநாயகம் இதழில் 'ஓட்டுப்பொறுக்கிகள்—பேட்டை ரௌடிகள்' என்ற தலைப்பில் சூரக்காடு கிராமத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை மக்களுக்குத் திரைகிழித்துக் காட்டி எழுதப்பட்ட கட்டுரையானது, புதிய ஜனநாயகம் விவசாயிகளிடத்தில் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. ரௌடிகளை உழைக்கும் மக்கள் ஒன்று திரண்டு எதிர்க்கவேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது சூரக்காடு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. உண்மைகளை துணிவோடு வெளியிட்ட புதிய ஜனநாயகம் எங்கே எங்கே என்று மக்கள் ஆர்வத்துடன் கேட்டு வாங்கிப் படித்தனர். படிக்கத் தெரியாதவர்கள் கூட்டமாகக் கூடி பிறர் படிக்கக்கேட்டு பாராட்டினர். சாராய வியாபாரியும், சாதி வெறியனும், சட்டமன்ற உறுப்பினரும், ரௌடியுமாகிய வெங்கடாசலத்தையும் அவரது அடியாள் கும்பலையும் அம்பலப்படுத்தியது பாராட்டுக்குரியது. மக்களைச் சுரண்டிக் கொழுப்பதில் கட்சிப் பாகுபாடு இன்றி எம்எல்ஏவின் காலை நக்கிப் பிழைக்கும் தி.மு.க சேர்மன் சூசைராஜை இன்னும் தோலுரித்துக் காட்டியிருக்கலாம். புதிய ஜனநாயகத்தின் புரட்சிப் பணி தொடர கிராம மக்கள் சார்பில் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

ஸ்டாலின் சூரக்காடு

(இதே கருத்துக்களைக் கூறி சூரக்காடு கிராமத்தைச் சேர்ந்த ரெங்கசாமி, மதியழகன் ஆகியோரும் கடிதம் எழுதியுள்ளனர்)

● இதழ் எண் 22ல் சாதிக்கலவரம் பற்றிய கட்டுரை இன்னும் விரிவாக ஆழமாக வந்திருக்க வேண்டும். சாதிய சங்கங்களின் நோக்கம், இட ஒதுக்கீடுகள் யாருக்குப் பயன்படும் என்பனவற்றை விளக்கி எழுதியிருக்க வேண்டும். இதழ்எண் 22ல் தலையங்கக் கட்டுரை சுருக்கமாக அமைந்து ஏமாற்றமளித்தது. வருமிதழில் இன்னும் விரிவாக இந்தியப் படையின் அக்கிரமங்களை தொகுத்து எழுதக் கோருகிறோம்.

வாசகர் வட்டம் கல்லை வட்டம்

● இதழ் எண் 22ல் புலிகளின் லட்சியம் புதைகுழிக்குப் போனது என்ற கட்டுரை, அதற்கான காரணங்களைத் தொகுத்துக் கூறாமல் வெறும் செய்தியாக உள்ளது. 'சங்கராச்சாரி யார்?' என்ற கட்டுரை ஓட்டுச்சீட்டுக் காரர்களைப் போல கவர்ச்சி காட்டி மக்களை ஏய்க்கும் மதப்பண்டாரங்களை சிறப்பாக படம் பிடித்துக் காட்டியது. இது போல முஸ்லிம், கிறித்துவ மதப் பண்டாரங்களையும் ஆதீனங்கள், மடாதிபதிகளையும் அம்பலப்படுத்தக் கோருகிறோம்.

வாசகர் வட்டம் மதுரை

● அமைதிப்படை என்று சொல்லிக் கொண்டு அப்பாவி தமிழ்மக்களைக் கொன்று, பெண்களைக் கற்பழித்து, மருத்துவமனையை அழித்து ஆட்டம் போட்ட இந்தியக் கூலிப்படைக்கும் இஸ்ரேலிய மொசாத்துக்கும் என்ன வேறுபாடு? இந்தக் கூலிப்படையின் அட்டூழியங்களை தைரியமாக மக்களுக்கு எடுத்துக் கூறிய புதிய ஜனநாயகத்துக்கு எனது பாராட்டுக்கள்!

ராஜா சென்னை

● 'செந்தமிழ்' நாடேனும் போதினிலே, இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே!' என்பதுபழைய பாடல். சீர்காழி தாலுகா எனும் போதினிலே கள்ளசாராயக் கடையெல்லாம் வழியினிலே என்பதே எங்கள் பகுதியின் புதிய பாடல். இங்கே கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பது குற்றமல்ல. காய்ச்சுபவர் வாரத்திற்கு ரூ 500ம், விற்பவர் வாரத்திற்கு 200ம் போலீசுக்கு மாமூல் கட்டிவிட்டு சுதந்திரமாகத் தொழில் நடத்தலாம். எண் 19ல் நீங்கள் எழுதியது போல போடப்படும் சட்டங்கள் மீறப்படுவதற்குத் தான். இனி மக்களே அதிகாரத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு இந்த சமூக விரோதிகளைத் தண்டிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

கேசவன் சீர்காழி

● பண்ருட்டி பஸ் நிலையத்தில் நான் பள்ளியைவிட்டு வந்து நின்றபோது, அங்கு புத்தக கடையில் புதியஜனநாயகம் என்ற வைரத்தைக் கண்டெடுத்தேன். இவ்வளவு அருமையான பத்திரிக்கை நடத்தி வருகிறீர்கள் என்பது இது நாள் வரை தெரியாதது வருத்தமளிக்கிறது. என் போன்ற மாணவர்கள் மத்தியில் புதியஜனநாயகத்தைப்போற்றுவேன்; பெருமைகளை எடுத்துரைப்பேன்.

ரவி T. குமாரமங்கலம்

● புதிய ஜனநாயகம் பத்திரிக்கையைக் கையில் எடுத்தவுடன் இயந்திரத் துப்பாக்கியைக் கையில் எடுத்தது போன்று இருக்கிறது. இதழின் ஒவ்வொரு செய்தியும் சீறிப்பாயும் குண்டுகளைப் போல் உள்ளது. சாதாரண சமூக சேவைக்கே நெருக்கடிகளும் அடக்குமுறையும் ஏற்படும்போது, எதற்கும் அஞ்சாது லாப நோக்கமில்லாமல் பத்திரிக்கை நடத்தும் உங்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளை அளவிட முடியாது. அத்தனையும் சமாளித்து புரட்சிப் பாதையில் பீடுநடை போட்டு வரும் உங்களை மனமாரப் பாராட்டுகிறேன். தொடர்ந்து இதே வழியில் வீறு நடைபோட்டு முன்னேற மூன்றாமாண்டில் அடியெடுத்து வைக்கும் புதிய ஜனநாயகத்தை வாழ்த்துகிறேன்.

அப்துல் வகாப் நெல்லை



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய—லெனினிய அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

1

16—30 நவம்பர் '87

தனி இதழ் : ரூ 1
ஆண்டு சந்தா : ரூ 24

# ஈழ ஆதரவு இயக்கங்கள்மீது மோகன்தாஸ்-தேவாரம்படை பாயும்!

அவமானகரமானதொரு ஆக்கிரமிப்புக் கொலை வெறியாட்டத்தில் யாழ் நகரைக் கைப்பற்றியது இந்திய இராணுவம். பிறகு ஈழத்தின் வடக்கு—கிழக்கு மாகாணங்களில் உள்ள சாவகச்சேரி, மன்னார், வவுனியா, வடமராட்சி, திரிகோணமலை, மட்டக்களப்பு இன்னும் பிற பகுதிகளில் விடுதலைப் புலிகளைத் தேடி அழிக்கும் போரைத் தொடர்கிறது. யாழ்நகரில் பெருமளவு மக்கள் ஆதரவுடன் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும்அதே சமயம் தினசரி 20, 25 புலிகளைக் கொல்வதாகவும், ஏராளமான ஆயுதங்களைக் கைப்பற்றுவதாகவும் பீற்றிக் கொள்ளுகிறது.

ஆனால் செய்வதே வேறு. ஒவ்வொரு பகுதியாக ஊரடங்கு போட்டு விமானங்களில் இருந்து குண்டுவீசி, கவச வண்டிகள்—பீரங்கிகளால் தாக்கி சந்தேகத்துக்குரிய ஈழத் தமிழர் பலரைப் பிடித்து நிர்வாணமாக்கி சித்திரவதை செய்து, பெண்களைக் கற்பழித்து, தினசரி படுகொலைகள் நடக்கின்றன. யாழ்நகரில் ஏற்பட்ட பேரிழப்புக்குப் பழிவாங்கும் வெறியோடு—வக்கிரத்தோடு இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள் தொடர்கின்றன. எனவேதான் "இந்தச் சமயத்தில் ஒரு நாடோ—அரசாங்கமோ அல்லாத சிறு கும்பலுடன் போர் நிறுத்தம் அறிவிப்பது இந்திய இராணுவத்தின் தார்மீக பலத்தை வீழ்த்தி விடும்" என்று மந்திரி அச்சம் தெரிவிக்கிறார்.

நாடாளுமன்றத்தில் போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட ராஜீவ் கும்பலின் கூட்டாளிகள் வெட்கமின்றி இந்தஅட்டூழியங்களுக்குத் துணைபோகின்றனர். "உடனடியாகப் போர் நிறுத்தவேண்டும். படை வாபஸ் ஆக வேண்டும்" என்று கோரும் சில எதிர்க்கட்சிகள்கூட இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பையோ, அக்கிரமங்களையே எதிர்க்கவில்லை. அப்படிச் செய்வது தேச துரோகம் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. மாறாக இந்திய இராணுவத்தின் "கட்டுப்பாடு, திறமை, ஒழுக்கம், தியாகம்" ஆகியவற்றை எதிர்க்கட்சிகள் போற்றுகின்றன. இழப்புகள், செலவுகள், ஒப்பந்தத்தின் குறைபாடுகள், இலங்கையில் இந்திய இராணுவம் சிக்கிக் கொண்டுவிடும் அபாயம் ஆகியவை பற்றிய அச்சமே முக்கியமாகத் தெரிவிக்கப்படுகின்றன. அறவழியிலும் நாடாளுமன்ற—சட்டமன்ற "உதாரிலும்" ஈடுபட்டுள்ள தி.மு.ககூட போர் நிறுத்தத்தையே கோருகிறது—ஆக்கிரமிப்பை எதிர்க்கவில்லை.

"நிபந்தனையன்றி ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு புலிகள் சரணடைய வேண்டும். இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை ஏற்று அமுல்படுத்த வேண்டும்" ஆகிய இரு நிபந்தனைகளில் இருந்து கொஞ்சம்கூட விட்டுக் கொடுக்காது அடாவடித்தனமாகப் பேசுகிறது ராஜீவ் கும்பல். "புலிகளை நிராயுதபாணியாக்குவதும், அமைதியை நிலைநாட்டுவதும்" தொடரும்; ஈழத் தமிழர்களின் நியாயமான நலன்களைப் பாதுகாப்பது, இலங்கை பிளவுபடாத ஒருங்கிணைந்த நாடாக இருப்பதை உறுதி செய்வது, எல்லாவற்றுக்கும் மேலாக தென் பிராந்தியத்தில் இந்தியாவின் நலன்களை அடைவது—இவையே ஒப்பந்தத்தின் நோக்கம் என்று புளுகுகிறது.

இப்போது இன்னும் பட்டவர்த்தனமாக இலங்கைத் துறைமுகங்களில் இந்திய இராணுவ ஆதிக்கம், திரிகோணமலை எண்ணெய் வயல்களை இந்தியா பயன்படுத்துவது, இலங்கையுடன் தொழில்—இராணுவக் கூட்டு, இலங்கையில் ஒலிபரப்பு, துறைமுகங்கள் ஆகிய வசதிகளை இந்தியாவின் எதிராளிகளுக்கு மறுப்பது ஆகிய இந்திய நலன்கள் ஒப்பந்தத்தின் மூலம் அடைந்திருப்பதாக ராஜீவ் கும்பல் ஒப்புக் கொள்கிறது. இந்த நோக்கங்களுக்காகத்தான் சிங்களர், தமிழ் மக்களின் கடும் எதிர்ப்புக்கிடையிலும், போரும் தனிநபர் பயங்கரவாதச் செயல்களும் ஏராளமான சிவிலியன்களைக் காவு கொண்டபோதும், இந்திய இராணுவம் பேரிழப்புகளையும், தார்மீக வீழ்ச்சியையும் சந்தித்து வந்தபோதும்—மூர்க்கமான ஆக்கிரமிப்புப்போரை பாசிச ராஜீவ் கும்பல் தொடர்கிறது. இனி இலங்கை அரசே எதிர்த்தாலும் அது பின்வாங்காது.

இந்திய ஆக்கிரமிப்புக்கெதிரான இயக்கங்களைத் தொடரும் தமிழக மக்கள் இன்னும் ஒரு விஷயத்தில் விழிப்போடும் எச்சரிக்கையோடும் இருக்க வேண்டும். இதுவரை ஈழ விடுதலை இயக்கத்தை ஆதரிப்பதாக நாடகமாடிய பாசிச எம்ஜிஆர் கும்பல் அந்த வேடத்தைக் கலைந்து வருகிறது. "ஈழப் பிரச்சினை ஒரு வெளிநாட்டுப் பிரச்சினை" என்றுகூறிசட்டமன்றத்தில் விவாதிக்கவே மறுக்கும் அதே சமயம் தமது எடுபிடிகளான காளிமுத்து போன்றோரை வாயடைத்துவிட்டு கல்யாணசுந்தரம், பாண்டியன், ஜெயகாந்தன், சோ போன்ற ஆக்கிரமிப்பு ஆதரவாளர்களை முடுக்கி விட்டுள்ளது. அ தி.மு.க, காங்கிரசு மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகள் அடங்கிய கூட்டணி கட்டி ஈழ விடுதலைக்கு எதிரான அப்பட்டமான பிரச்சாரம் தொடங்கியிருக்கிறது. அடுத்த கட்டமாக தனது ஏவல் நாய்களான மோகன்தாஸ்—தேவாரம் படையை ஏவி ஈழ விடுதலை ஆதரவு இயக்கத்தின்மீது தமிழகத்தில் ஒரு பாசிச தாக்குதலைத் தொடுப்பதற்கு காத்துக் கொண்டிருக்கிறது. இந்த எத்தணிப்புகள் அனைத்தையும் முறியடித்து இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான இயக்கத்தைப் பரந்து விரிந்த அளவில் நடத்தவேண்டும். ●

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத்தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர் 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை—600 015.

படிப்பகம்

www.padippakam.com

# விசாரணைக் கமிஷன் மோசடிக்கு இன்னும் இரண்டு சான்றுகள்

பொதுவாக விசாரணைக் கமிஷன்கள் என்பதே ஆட்சியாளர்களும் எதிர்க்கட்சியினரும் சேர்ந்து நடத்தும் பித்தலாட்டமே! அதிகாரத்திலுள்ளவர்களின் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், சாதி-மத-இனக் கலவரங்கள், அரசு எந்திரத்தின் அக்கிரமங்கள் ஆகிய எந்த விவகாரமானாலும் சரி, பிரச்சினை வெடித்து முற்றி, சூடு பறக்கும்போது, மக்கள் உண்மையறிந்து கொதிப்புற்று நிற்கும் போது அவர்களது கவனத்தைத் திசை திருப்பி மூடி மறைப்பதற்காக அனைத்து ஓட்டுக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியாளர்கள் பின்பற்றும் கைவந்த உத்தி—விசாரணைக் கமிஷன்.

உண்மையை ஆய்ந்தறிந்து, குற்றவாளிகளைக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுப்பதற்காகவே விசாரணைக் கமிஷன் போடுவதாக ஒவ்வொரு விவகாரத்திலும்அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் பெரும்பான்மையான விசாரணைக் கமிஷன்களும் குற்றவாளிகளைத் தப்புவிப்பதற்கான வகையில் மழுப்பி விடுகின்றன. சில விவகாரங்களில் குறிப்பான குற்றவாளிகள் சுட்டிக் காட்டப்பட்டாலும், விசாரணைக் கமிஷன் அறிக்கைகள் அரசின் குப்பைக் கூடையில் வீசப்படுகின்றன. இதை நிரூபிக்கும் வகையிலே இப்போது இரண்டு விசாரணைக் கமிஷன் அறிக்கைகள் வந்திருக்கின்றன.

ஒன்று, கடந்த ஆண்டு அக்டோபர் 22ந் தேதி கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம், தங்கமணி கிராமத்தில் துப்பாக்கி சூடு, சூறையாடல், கற்பழிப்பு நடத்திய போலீசின் அக்கிரமங்களை விசாரித்த ஸ்ரீதேவி கமிஷன் அறிக்கை. மற்றொன்று, உத்திரப் பிரதேசம் மீரட் நகரில் கடந்த ஏப்ரல்—மே மாதங்களில் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களைக் காவு கொண்ட மத வெறிப் படுகொலைகளை விசாரித்த ஜியன் பிரகாஷ் தலைமையிலான மூவர்கமிட்டி அறிக்கை.

ஸ்ரீதேவி கமிஷன் அறிக்கை கிடைத்து ஒருமாதமாகியும் அதன் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு அசைய மறுக்கும் போலி கம்யூனிஸ்டுகளின் இரட்டை வேடம் இப்போது அம்பலப்பட்டுப்போயுள்ளது. வெளிநாடுகளில் கருப்புப் பணம், ஆயுத பேர ஊழல்கள் ஆகியவற்றினால் சிக்கித் திணறியது பாசிச ராஜீவ் கும்பல்; அவற்றிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக காங்கிரசின் தலைவர்களால் தூண்டிவிடப்பட்டது; ஆயுதப் படையினரின் இந்து மதவெறிக் கொலைகள் பெருமளவு நடந்தது—இவற்றை மூடி மறைப்பதற்காக மீரட் விசாரணைக் கமிஷன் பயன்பட்டிருக்கிறது.

● ● ●

தங்கமணிக்குப் பஸ் வசதி கோரிப் பலதடவை அரசிடம் முறையிட்டனர் அக்கிராம மக்கள்; பலனில்லை. அப்போது ஆளும் கூட்டணிக் கட்சியான கேரள காங்கிரசின் பஸ் முதலாளி அதைத் தடுத்து வந்தான். ஒருநாள் தமது ஊருக்குப் பஸ்ஸைத் திருப்பச் சொல்லி பஸ் ஊழியரோடு வாக்குவாதம் நடத்திய இரண்டு மாணவர்களைப் பிடித்துப் போய் கட்டப்பனா போலீசார் சித்திரவதை செய்தனர். தங்கமணி கிராம மக்கள் திரண்டு போய் போலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டு அவர்களை மீட்டு வந்தனர். அடுத்த நாள் பஸ்ஸைப் பிடித்து வைத்துக் கொண்டு ஊழியர்களிடம் மன்னிப்புக் கேட்கும்படி கோரினர். அன்று மாலை பஸ் முதலாளி பெரும் போலீஸ் படையுடன் தங்கமணிக்குப்போனான். போலீஸ் துப்பாக்கி சூடு நடத்தி ஒரு விவசாயியைக் கொன்று விட்டு, தடியடி நடத்தி மக்களை விரட்டிவிட்டு பஸ்ஸை மீட்டுச் சென்றனர்.

அன்று நள்ளிரவு இடுக்கி மாவட்டத் துணை நீதிபதி, போலீஸ் சூப்பிரண்டண்ட், துணைக் கலெக்டர் ஆகியோர் தலைமையில் மீண்டும் ஒரு பெரிய போலீஸ் படை வந்தது. போலீசுத் தாக்குதலை எதிர்பார்த்து அஞ்சிய ஆண்கள் அனைவரும் கிராமத்தை விட்டு ஓடிப்போயிருந்தனர். கதவை உடைத்து வீடுகளுக்குள் புகுந்த போலீஸ் குண்டர்கள் வீடுகளை சூறையாடியதோடு 31 பெண்களைக் கற்பழித்தனர். நள்ளிரவு நான்கு மணி நேரம் நடந்த இந்த வெறியாட்டத்தை அடியோடு மறுத்தார் அவசரநிலை பாசிச முதல்வர் கருணாகரன். எதிர்க் கட்சிகள்—பத்திரிக்கைகள் கோரியதன் பேரில், தேர்தல் சமயத்தில் திசை திருப்பிவிடும் நோக்கத்தோடு விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது. சூப்பிரண்டண்ட் புலிகேசி மற்றும் 14 போலீசு அதிகாரிகள் தலைமையில் கற்பழிப்பு உட்பட போலீசு அட்டூழியங்கள் நடந்தது உண்மைதான் என்று குறிப்பாக கமிஷன் அறிக்கை கூறியது.

அந்த ஸ்ரீதேவி கமிஷன் அறிக்கை வந்த ஒரு மாதமாகியும் கேரளத்தில் தற்போது ஆட்சியிலுள்ள நாயனார் தலைமையிலான போலிக் கம்யூனிஸ்டு அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. எதிர்க்கட்சியாய் இருக்கும்போது ஆளுங்கட்சி மற்றும் போலீசு அக்கிரமங்களைக் காட்டி பிரச்சாரம் செய்து ஓட்டுப் பொறுக்குவது; ஆட்சிக்கு வந்த பிறகு அவற்றைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவது—இது பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் ஓட்டுக்கட்சிகளின் வழக்கமான சமரச தந்திரம் தான்!

அவசரநிலை ஆட்சியின்போது இதே பாசிஸ்டு கருணாகரன் நக்சல்பாரிப் புரட்சியாளர்களை நரவேட்டையாடினார். அப்போது கள்ளிக்கோட்டைஎன்ஜினியரிங் கல்லூரி மாணவர் ராஜனை போலீசார் சித்திரவதை செய்து படுகொலை செய்தனர். அவசரநிலை ஆட்சிக்கு வந்த பிறகு வந்த தேர்லில் ராஜன் கொலை வழக்கைத் தமது தேர்தல் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்தார் இதே போலிக் கம்யூனிஸ்டு நாயனார். ஆனால் படுகொலைக்குக் காரணமான போலீசு அதிகாரி படிகல் ஜெயராமனும் மற்றவர்களும் தண்டிக்கப்படவில்லை. மாறாக, பதவி உயர்வு பெற்றனர்.

ஆட்சியின் போதும் அதற்கு முன்பும் மேற்கு வங்கத்தில் போலீசுடன் மோதல் என்கிற பெயரில் நூற்றுக் கணக்கான கம்யூனிஸ்டு புரட்சியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளின் ஊழியர்களும் காங்கிரசு-போலீசு குண்டர்களால் சித்திரவதை செய்யப்பட்டனர். இந்த அக்கிரமங்களை விசாரித்து குற்றவாளிகளைத் தண்டிப்பதாக 1977 தேர்தலின்போது போலிக் கம்யூனிஸ்டுகள் வாக்குறுதி கொடுத்தனர். ஆட்சிக்கு வந்த பிறகு விசாரணைக் கமிஷனும் போட்டார்கள். ஆனால் பத்து ஆண்டுகளாகியும் ஒரு குற்றவாளிகூட தண்டிக்கப்படவில்லை. கமிஷனை இழுத்து மூடியதோடு அதே காக்கிச் சட்டை கிரிமினல் குற்றவாளிகளோடு சேர்ந்து இப்போது கம்யூனிசப் புரட்சியாளர்களை போலிக் கம்யூனிஸ்டு ஆட்சியாளர்கள் நரவேட்டையாடி வருகின்றனர்.

அதேபோல, தங்கமணி அக்கிரமத்தைக் கருத்துப் படமாகவும், நாடகமாகவும், சினிமாவாகவும் தயாரித்து போலிக் கம்யூனிஸ்டுகள் ஓட்டுப் பொறுக்கி ஆட்சிக்கு வந்தனர். இப்போது ஸ்ரீதேவி கமிஷன் அறிக்கை வந்துள்ளது. நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைத் தண்டிக்கவில்லை. அப்போது ராஜனைக் கொன்ற கொலை வெறியன் படிகல் ஜெயராமன் தப்பித்துக்



படிப்பகம்

www.padippakam.com



கதவை உடைத்து வீடுகளுக்குள் புகுந்த போலீஸ் குண்டர்கள் வீடுகளை சூறையாடியதோடு 31 பெண்களைக் கற்பழித்தனர்.

கொண்டு பதவி உயர்வு பெற்றதைப் போலவே இப்போது தங்கமணி அக்கிரமத்துக்குத் தலைமையேற்ற காமவெறியன் புலிகேசி கொக்கரிக்கிறான்.

ஸ்ரீதேவி கமிஷன் அறிக்கை மீது போலிக் கம்யூனிஸ்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு இன்னொரு காரணம், மாநில போலீசு சங்கம் அவர்கள் தலைமையில் உள்ளது. காக்கிச் சட்டை கிரிமினல் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுப்பதை அந்தச் சங்கமே தடுக்கிறது. புரட்சிகர நோக்கத்துக்காக போலீசாரைத் திரட்டுவது என்றில்லாமல் சுயநல, பிழைப்புவாத, தொழிற்சங்கவாத அடிப்படையில் சங்கம் சேர்த்து வைத்துள்ளனர். எனவே அவர்களின் மக்கள் விரோத, கொலைவெறி, காமவெறி வக்கிரங்களுக்குப் போலிக் கம்யூனிஸ்டுகள் துணை போகிறார்கள்.

கடந்த தேர்தலில் ஓட்டுப் பொறுக்குவதற்காக போலிக் கம்யூனிஸ்டுகள் பயன்படுத்திய மற்றொரு போலீசு அட்டூழியம் அதன் வக்கிரத்துக்கே இலக்கணம் வகுப்பதாகும். சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் கேரளத்தின் வயநாட்டில் உள்ள அப்பாபாரா கிராமத்து ஆதிவாசிப் பெண்களை இழுத்து வந்து சாராயத்தை ஊற்றி நள்ளிரவில் நிர்வாணமாக ஆடவிட்டு, மானபங்கப்படுத்தி விருந்துண்டு எஸ்டேட்டு முதலாளிகளுடன் கும்மாளமடித்தனர், போலீசார். இவர்கள் மீதும் இதுவரை நடவடிக்கை இல்லை. இப்படிப்பட்ட காக்கிச் சட்டை கிரிமினல் குற்றவாளிகளின் பாதுகாவலர்களாகத்தான் போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளனர். இதை மீண்டும் ஒருமுறை நிரூபிக்கும் வகையிலேயே தங்கமணி அக்கிரமம் பற்றிய விசாரணைக் கமிஷன் தீர்ப்பை அவர்கள் கிடப்பில் போட்டுள்ளனர்.

"கடந்த ஏப்ரல்—மே மாதங்களில் நடந்த மீரட் மதக் கலவரங்கள் அதற்கு முன்பு நடந்தவற்றைப் போல தற்செயலான சம்பவங்களில் இருந்து தொடங்கவில்லை. அமைப்பு ரீதியில் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட, சரியாக வழிகாட்டப்பட்ட, திட்டமிட்ட கலவரங்கள் நடந்துள்ளன. வெளிநாட்டு உளவுச் சக்திகள் இதில் சம்பந்தப்படவில்லை. அரசு அதிகாரத்துக்கு எதிராகவும் இது இல்லை. ஒரு உள்நாட்டுப் போருக்கான ஒத்திகையுமில்லை. இருந்தும் சரியாகத் திட்டமிட்டு, தயாரித்து, தூண்டிவிடப்பட்டு நடந்த கலவரம் இது" என்று மீரட் கலவரம் குறித்த மூவர் விசாரணைக் கமிஷன் அறிக்கை கூறுகிறது.

இவ்வளவு உறுதியாகக் கூறும் கமிஷன், கலவரத்துக்குக் காரணமான குற்றவாளிகளைச் சுட்டிக் காட்டவில்லை. அதற்கு மாறாக இந்து—முஸ்லிம் மதங்களின் தலைவர்கள் ராமஜன்மபூமி—பாபரிமஸ்ஜித் விவகாரம் குறித்து மதவெறியைத் தூண்டிவிடும் வகையில் ஆபாசமாகப் பேசிய பின்னணியை மட்டும் குறிப்பிடுகிறது. மீரட் கலவரத்தை தூண்டிவிடும் வகையில் காங்கிரசுக் கட்சியில் இன்னின்னார் செயல்படுகிறார்கள் என்று குறிப்பாக பகிரங்கமாக அதே கட்சியினரால் குற்றஞ்சாட்டப்பட்டும் அவர்களைப்பற்றி கமிஷன் மூச்சுவிடவே இல்லை. அதே போல உத்திரப் பிரதேச ரிசர்வ் ஆயுதப்படை இந்து மதவெறிபூண்டு மீரட் நகரின் புறநகர் குறிப்பாக மலியானா, இஸ்லாமாபாத், மியான் முகமது நகர், காஞ்காபால், பிலோகரி, லக்கிபுரா ஆகிய பகுதிகளில் அப்பாவி முஸ்லிம்களை நரவேட்டையாடியது—படுகொலை செய்த பிணங்களை ஹிண்டான் மற்றும் கங்கைக் கால்வாயில் வீசியெறிந்தது. படங்களுடன் பத்திரிக்கைகள் அம்பலப்படுத்திய பிறகு பிரதேச ஆயுதப்படை விலக்கிக் கொள்ளப்பட்டு இராணுவம் அனுப்பப்பட்டது. இந்த உண்மைகளையும் விசாரணைக் கமிஷன் மூடி மறைத்து விட்டது.

வெளிநாடுகளில் ராஜீவின் பினாமிகள் கருப்புப்பணம் குவித்திருப்பது, நீர்மூழ்கி மற்றும் பீரங்கி பேரங்களில் ராஜீவ் கும்பல் சம்பந்தப்பட்டிருப்பது ஆகிய உண்மைகள் வெளிவந்து அது மூச்சுத் திணறிக் கொண்டிருந்த சமயம். ராஜீவின் அரசியல் எதிரிகள் வி.பி. சிங் தலைமையில் உத்திரப்பிரதேசத்தைக் கலக்கிக் கொண்டிருந்தனர். இந்த நெருக்கடிகளில் இருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்ப வேண்டுமானால் வகுப்புவாதப்பிரச்சினையில் கவனம் செலுத்தும்படி அவரதுபாதந்தாங்கிகளான அக்பர், கரஞ்சியா போன்றவர்கள் பகிரங்கமாகவே அப்போது எழுதினர். இந்தப் பின்னணியை விட்டுவிட்டு ராம ஜன்மபூமி—பாபரி மஸ்ஜித் பற்றிய மதத் தலைவர்களின் கலவரத்தைத் தூண்டும் பேச்சுகளை மட்டும் மீரட் மதக்கலவர விசாரணைக் கமிசன் குறிப்பிடுகிறது. இந்த விவகாரத்துக்கும்கூட பாசிச ராஜீவ் கும்பலே பொறுப்பாகும்.

மதவெறி அடிப்படைவாதிகளுக்கும் சலுகைகள் கொடுத்து சமரசம் செய்து கொள்வதன் மூலம் ஓட்டுப் பொறுக்குவது என்கிற அதன் அரசியல் உத்தியே காரணம். ஷாபானுவின் ஜீவனாம்ச வழக்கில் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை எட்டி உதைத்துவிட்டு 1400 ஆண்டுகளுக்குமுந்திய 'ஷாரியத்' என்னும் பிற்போக்கு சட்டத்தைக் கொண்டு வந்து முஸ்லீம் மதவெறியர்களுடன் கைகோர்த்துக் கொண்டது. பூட்டிக் கிடந்த ராம ஜன்ம பூமி—பாபரி மஸ்ஜித் எனும் வழிபாட்டுத் தலத்தை இந்துக்களுக்குத் திறந்துவிடும் கீழ்நிலை நீதிமன்றத் தீர்ப்பை மட்டும் அப்படியே ஏற்றுக் கொண்டு "நீதித் துறையில் தலையிட முடியாது" என்று கூறி இந்து மதவெறியர்களுடன் கைகோர்த்துக் கொண்டது.

ராஜீவ் கும்பல் ஓட்டுப் பொறுக்குவதுடன் இந்த விவகாரங்கள் அடங்கி விடவில்லை. பொதுமண முறைச் சட்டம் மற்றும் ராமன், கண்ணன் பிறந்த பூமிகளை மீட்பது என்று இந்து மதவெறியர்களும் பாபரி மஸ்ஜித் மற்றும் தொல் பொருள் ஆய்வு கழகத்திடமிருந்து 250 மசூதிகளை மீட்பது என்று முஸ்லீம் மதவெறியர்களும் கிளம்பியுள்ளனர். மதவெறித் தீயில் குளிர் காய்கிறது பாசிச ராஜீவ் கும்பல். மக்களோ எரிந்து சாம்பலாகிறார்கள்.

● மாணிக்கவாசகம்



படிப்பகம்

www.padippakam.com

# ஈழம்: கருங்காலிகளாகப் போலிக் கம்யூனிஸ்டுகள்

போலிக் கம்யூனிஸ்டுகளின் புகழ்மாலையைக் கேட்டால் இலங்கையில் இருக்கும் இந்திய படையினர் அப்படியே ஆனந்தக் கண்ணீர் வடிப்பார்கள். அப்படி ஒரு புகழ் மாலையை இங்கு அனுதினமும் அரங்கேற்றுகிறார்கள் போலிக் கம்யூனிஸ்டுகள். புலிகளால் தொல்லைக்கு உள்ளாகும் 'அமைதிப் படை'யினரின் இன்னல்கள் தீரவும் புலிகளுக்கு தக்க தண்டனை கிடைக்கவும் 'எல்லாம் வல்ல இறைவனிடம் மட்டும்தான் இன்னும் இவர்கள் கோரிக்கை (வெளிப்படையாக) வைக்கவில்லை. மற்றபடி அமைதிப்படையினரின் பாதங்களை தலைமேல் வைத்துக் கொண்டு அதன் அருமை பெருமைகளை கண்ணீர் மல்க சொல்கிறார்கள். பிரதமர் ராஜீவ் காந்தி இன்னும் விழிப்புடன் செயல்பட்டிருந்தால் அமைதிப் படையினருக்கு இந்த அளவுகூட காயம்பட்டிருக்காது என சோகத்தின் நடுவேயும் விவேகத்துடன் ராஜீவின் சிரத்தையற்ற போக்கை சுட்டிக் காட்டுகிறார்கள்.

"மத்திய அரசு கடந்த காலங்களில் சில அதிகாரிகளை நம்பியே தவறான நடவடிக்கை எடுத்துள்ளது. பல போராளி குழுக்கள் களத்தில் நிற்கும்போது, பிரபாகரனுக்கு மட்டும் அங்கீகாரம் கொடுத்து, கொம்பு சீவிவிட்ட 'பெருமை' நம் மத்திய—மாநில அரசுகளுக்கு உண்டு. வளர்த்தார்கள். இப்போது மார்பில் பாயவும் விழிக்கிறார்கள்!" —தா. பாண்டியன் (ஜூனியர் விகடன் 21-10-87)

"ஜூலை 29ந் தேதி முதல் (இலங்கை—இந்திய ஒப்பந்தம் கையெழுத்தான தேதி) அக்டோபர் 9ந் தேதிவரை (இந்திய அரசு யாழ்ப்பாணத்தின் மீது போர் துவங்கிய தேதி) வரை புலிகள் அந்நிய சீர்குலைவு சக்திகளிடம் பேரம் நடத்தியிருக்கிறார்கள். இந்திய அரசுக்கு எதிராக புலிகள் தொடுத்த போரில் உபயோகித்த ஆயுதங்கள் பெருமளவு அச்சக்திகள் கொடுத்தவைதான். யாழ்ப்பாணத்தில், அந்நாட்களில் புலிகள் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரத்தை தடையில்லாமல் நடத்திக் கொண்டிருந்தார்கள். அதற்கு எதிரான பிரச்சாரம் இங்கு நடத்தவேயில்லை" —கல்யாணசுந்தரம் (தினமலர் 15—11—87). இவற்றுக்குளெல்லாம் ராஜீவ் அரசு, இடம் கொடுக்காமல் இருந்திருந்தால், மற்ற குழுக்களை விழுங்கியது மாதிரியே புலிகளையும் எளிதாக விழுங்கியிருக்கலாம் என்கிறார்கள்.

ஜெயவர்த்தனேவை மிரட்டிப் பணிய வைத்து, இலங்கையின் மீது தன்னுடைய மேலாதிக்கத்தை நிறுவுவதற்காக சிங்கள சிவிலியன்களைக் கொல்வதற்காக கடந்த காலங்களில் பாசிச ராஜீவ் அரசு புலிகளைப் பயன்படுத்தியது. ஊரறிந்த இந்த ரகசியத்தை வெளிப்படையாகச் சொல்லவும் திராணியற்ற இக்கோழைகள் 'சில அதிகாரிகளை நம்பி' கடந்த காலங்களில் தவறாக புலிகளை மத்திய அரசு (ராஜீவ் அரசு என்று சொல்வதற்கு கூட குலை நடுக்கம்) வளர்த்து விட்டதாம். இந்திய அரசுக்கு எதிராக புலிகள் செய்த பிரச்சாரத்திற்கு எதிராக இந்தியா, "நாங்கள் ஆக்கிரமிப்பாளர்கள் அல்ல" என்று பொய் பிரச்சாரம் செய்துமக்களை ஏமாற்றதவறியதால் புலிகள் மக்கள் ஆதரவுடன் இந்த அளவு எகிறி குதித்தார்களாம்.

இங்கு போலிகள் செய்து வரும் இந்திய—சோவியத் நட்புறவு பிரச்சாரத்தை மக்கள் இப்போதாவது புரிந்து கொள்ள வேண்டும்! நாளைக்கு ரஷியா இந்தியா மீது படையெடுத்தாலும் இப்படித்தான் அமைதியைக் காக்க வருகிறது என்று புளுகி நம் தாய் திருநாட்டை பதவி சுகத்திற்காக காட்டிக் கொடுப்பார்கள்.

"இந்திய—இலங்கை ஒப்பந்தம் மட்டும் நிறைவேறாமல் இருந்திருந்தால் இலங்கை ராணுவத்தால், தமிழர்கள் மட்டுமல்ல, சிங்கள மக்களும் கூட வேட்டையாடப்பட்டு இருப்பார்கள். சிங்கள ராணுவம் ஜெயவர்த்தனே அரசை கவிழ்த்துவிட்டு ராணுவ ஆட்சியைக் கொண்டுவர திட்டம் தீட்டியிருந்தது அம்பலமாகியுள்ளது. தக்க தருணத்தில் ஜெயவர்த்தனே இந்திய அரசை துணைக்கு அழைத்தார்." (ஜனசக்தி 27—7—87)

வெங்கங்கெட்டவர்கள்! இலங்கையில் அப்படி ஆபத்து உண்மை


தீக்கதிர்
கோவிலை சுற்றிவளைத்து
ராணுவம் தாக்குதல்
அப்பாவி தமிழர் 17 பேர் சாவு
இலங்கை ராணுவ ... வழக்கைக்கு
சி. பி. ஐ. கண்டனம்
இந்தியா, சோவியத் நிராகரித்தன

சிங்கள ராணுவத்தை அன்று நார்நாராக தோலுரித்தவர்கள் யில் சூழ்ந்து இருந்தால், இலங்கை மக்களுக்கும் சகோதர 'கம்யூனிஸ்ட்' கட்சிக்கும் அல்லவா அறைகூவல் விடுக்க வேண்டும். விழிப்புடன் இருந்து அதை முறியடிக்கச் சொல்லி எச்சரிக்காமல் ஆளும் வர்க்கத்தின் ஏவல் நாய்களின் துரோக ஒப்பந்தங்களை வாய் கூசாமல் 'ஜனநாயகத்துக்கானது என்கிறார்களே! நேற்றுவரை ஜெயவர்த்தனேவை 'சிங்கள இன வெறியன்', 'அமெரிக்க கைக்கூலி' என்று கூப்பாடு போட்டவர்கள் ராஜீவுடன் ஜெயவர்த்தனே கை கோர்த்து கொண்டவுடன், இந்த புது ஜோடிகளின் தேன்நிலவை ரசியா வாழ்த்தி வரவேற்றவுடன் இவர்களும் அவசர அவசரமாக மார்பில் சந்தனம் பூசி பந்திக்கு முந்திக் கொண்டார்கள்.

ஒப்பந்தம் ஏற்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்புகூட ஜெயவர்த்தனேவையும், அவருடைய ராணுவத்தையும் சூடுபறக்க வெளுத்து வாங்கினார்கள். "தமிழ் தீவிரவாதிகளை எதிர்த்து போராட இலங்கை அரசு உறுதி கொண்டுள்ளது என்று இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனே கொக்கரிக்கிறார்" "இலங்கை அரசு தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாகக் கூறியது. ஆனால் அதற்கு மாறாக இவ்வாறு ராணுவ தாக்குதலை துவக்கியுள்ளது. இலங்கையின் ராணுவ தாக்குதல் (ஈழ தமிழர்கள் மீது) அந்நிய சக்திகளின் தூண்டுதல்" (தீக்கதிர் 28—5—87) என்று பக்கம் பக்கமாக செய்தி வெளியிட்டார்கள்.

அது மட்டுமல்ல, "மட்டக்களப்பில் திருவிழாவில் கொடுமை! கோவிலை சுற்றி வளைத்து ராணுவம் தாக்குதல். அப்பாவி தமிழர் 17 பேர் சாவு" (தீக் 6.7.87) "மக்கள் மீது குண்டு வீசவில்லையாம் இலங்கை மாய் மாலம்" "இலங்கையின் வடபகுதியில் யுத்தகளங்களைப் பார்வையிடுமாறு இலங்கை அரசு, பலநாட்டு தூதுவர்களை அழைத்திருந்தது. 4000 அடி உயரத்தில் பறந்து சென்று கீழே பார்ப்பதை நாங்கள் விரும்பவில்லை என்று கூறி இந்தியா அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை" (31.5.87). தமிழர்கள் விரல்களை துண்டித்து இலங்கை ராணுவம் கொடுமை" "இலங்கை தமிழ் இளைஞர் ஒருவர் பூசா முகாமில் கொல்லப்பட்டார் என ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) தெரிவித்தது" "எல். டி. டி. இ. தகவல்; நெல்லியாடி ராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்கு



படிப்பகம்

www.padippakam.com

தலில் சுமார் நூறு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்று இன்று சென்னையிலிருந்து வெளியிடப்பட்ட எல். டி. டி. இ. செய்தி குறிப்பு ஒன்று கூறுகிறது.”
(தீக்—ஜுலை7)

சிங்கள ராணுவத்தை அன்று நார் நாராக தோலுரித்தவர்கள் இன்றுஇந்தியராணுவம்தமிழர்களை கொன்று குவிக்கும் போது, அதை பரமசாதுவாக காண்பிக்க முயலுகிறார்கள். முதலாளித்துவ பத்திரிக்கைகளே அமைதிப்படையின் அக்கிரமங்களையும் ஈழ மக்கள் அதை வெறுத்து ஒதுக்குவதையும் அடுக்கடுக்காக அம்பலப்படுத்தும் போதும் இவர்கள் எழுதுகிறார்கள்: “அமைதிப்படை வீரர்களுக்கு வடமராச்சி மக்கள் வரவேற்பு. இனிப்புகள் வழங்கிஉற்சாகம்”, “..இந்திய வீரர்களைச் சூழ்ந்துக் கொண்ட வடமராச்சி தமிழ் மக்கள் தமது நிம்மதி உணர்வை வெளிப்படையாகத் தெரிவித்தனர். இந்திய வீரர்களுக்கு இனிப்புகளும் பழங்களும் சிகரெட்டுகளும் வழங்கினர்” (தீக்-10.11.87). இந்திய ராணுவம் மேலும், அகதிகள் முகாமில் போடும் பிச்சையை எல்லாம் விளாவரியாக எழுதுகிறார்கள்.

“புலிகள், யாழ்நகர மின் சாரத்தை குண்டு வெடிப்புகளுக்கு, பயன்படுத்துவதால், யாழ்ப்பாண நகரத்தின் மின் இணைப்பை துண்டித்துள்ளோம்” என்றுஇந்திய ராணுவ அதிகாரிகளே ஒப்புக்கொண்ட பிறகு இவர்கள் வலிந்து, வலிந்து எழுதுகிறார்கள். “எல்.டி.டி.யினர் வெளியேறும் போது மின் நிலையங்களை சேதப்படுத்தி விட்டுச் சென்றனர். மின் கம்பிகளை துண்டித்து விட்டனர்” (தீக் 2.11.87). போரைப் பற்றி குறைந்தபட்ச அறிவுகூட இல்லாதவன்தான் இதையெல்லாம் வாய் பிளந்து கேட்டுக்கொண்டிருப்பான். எதிரியின் தாக்குதல் வீச்சை குறைப்பதற்காக, எதிரிக்கு சாதகமாகவுள்ள செய்தி தொடர்புகளையும், போக்குவரத்தையும், இன்னபிறவற்றையும் முடமாக்குவது யுத்த காலங்களில் உயிராதாரமானது. ரஷியாவின் அரண்மனை ஆட்சி கவிழ்ப்பு ‘மாடல்’ புரட்சிக்கு ஏங்கிக் கொண்டிருக்கும் போலிக் கம்யூனிஸ்ட்டு தலைமைக்கு இவையெல்லாம் தெரிந்திருக்க நியாயம் இல்லைதான்.

இதைவிட பெரிய கூத்து, புலிகளை அம்பலப்படுத்த, அவர்களுடைய போர் நடவடிக்கைகளைப் பற்றி தமிழக மக்களிடம் சொல்ல வந்த போலிக் கம்யூனிஸ்ட்டுகள், தேசீய வெறி தலைக்கு ஏறி, பெரும் தியாகங்களைப் புரிந்த ஈழ மக்களின் இந்திய ராணுவ எதிர்ப்பு போர் நடவடிக்கைகளை பாசிஸ்ட்டுகளை விட கேவலமாக கொச்சைப்படுத்தி சுகம் கண்டார்கள்.

பெண்ணின் பாவாடைக்கு பின்னாலும், புடவைக்கு பின்னாலும் புலிகள் ஒளிந்துக் கொண்டு போர் புரிகின்றனர். விபரம் அறியாத குழந்தைகளையும், தள்ளாத வயதான முதியவர்களையும் முன் தள்ளி ஒளிந்து கொள்கிறார்கள் என்று ராஜீவ் விசுவாசம் தலைக்கேறி உளறினார்கள். “குழந்தைகள், பெண்கள் முதியவர்களைக் கேடயமாக முன்நிறுத்தி தமிழீழ விடுதலைப்புலிகள்தாக்குகின்றனர். இந்திய அமைதிபடையினர் மக்களைப் பாதுகாத்து தங்களையும் பாதுகாத்து போரிடவேண்டியிருக்கிறது” என்று கண்ணீர் மல்க கதை சொன்னார்கள்.
(தீக் 16.10.87)

போலிகள் மாதிரி, சொந்த நாட்டை அந்நிய ஆக்கிரமிப்புக்கு அடகுவைக்க துணியாமல் தேச பக்தியோடு இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்து சீறியெழுந்த ஈழப் போராளிகளை வேசித்தனமாக திட்டி தீர்த்தார்கள். ‘இந்தியாவுக்கு எதிராக எல். டி. டி. ஈ. கொக்கரிப்பு’ —ஜனசக்தி 28—10—87. ‘எல்.டிடி.ஈ. எடுத்துள்ள நிலைபாடுகள் அதிர்ச்சி தருபவை; மாத்தையா பேட்டியில் அம்பலம். இந்திய ராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள சிக்கல்களை புரிந்து கொள்ள மாத்தையாவின் கருத்துகள் உதவுகின்றன’ (8—11—87) என்று சொல்லிவிட்டு ஜனசக்தி இப்படி உறுமுகிறது! “இந்தியப்படை ஆக்கிரமிப்பாளராம்”, “இதர போராளி குழுக்கள் மானம் கெட்டவர்களாம். இந்திய ராணுவத்தை உடனே வெளியேற்ற யாழ்ப்பாண மக்களின் உணர்வுகளை எதிராக திருப்ப எல். டி. டி. ஈ முயன்றுள்ளது” என்று சொரணையே இல்லாமல் எழுதுகிறது. பிறகு புலிகளின் போர் ஓய்வு கோரிக்கையின் மர்மத்தையும் கண்டுபிடித்து விசுவாசத்துடன் ராஜீவை உசுப்பி விட்டு ஈழப் போராளிகளுக்கு எதிரான கொலைவெறி தாக்குதலை கண்டுகளிக்க காத்திருந்தனர்.




இன்றுஇந்தியராணுவம்தமிழர்களை கொன்று குவிக்கும் போது, அதை பரமசாதுவாக காண்பிக்க முயலுகிறார்கள்.

“ஆயுதங்களை ஒப்படைக்க போர் ஓய்வு வேண்டும் என்று விடுதலைப்புலிகள் கோரவில்லை. மீண்டும் ஒரு முனைப்பான தாக்குதலைத்தொடுக்க தக்க பலத்தை ஒருங்கிணைத்துக் கொள்ளத் தேவையான அவகாசத்தை பெறவே போர் ஓய்வு வேண்டும் என்று கோரிக்கையை தந்திரமாக எழுப்புகிறார்கள்” —ஜன. 5—11—87 என்று எழுதி காங்கிரசு குண்டர்களின் புலிகள் எதிர்ப்பு பிரச்சாரத்தையே விழுங்கி ஏப்பம் விட்டு நாறினார்கள்.

போரில் பாதிக்கப்பட்ட ஈழ மக்களிடமோ, இந்திய ராணுவத்தை எதிர்த்த புலிகளிடமோ கருத்து கேட்டு பிரசுரிக்கவில்லை. மாறாக இவர்களை தவிர மற்ற எல்லா கழிசடைகளும் வாந்தி எடுத்ததை அப்படியே பிடித்துக் கொண்டார்கள். குமுதம், கல்கியைக்கூட விடவில்லை. நாடாளுமன்ற விவாதங்களில் கூட எந்த எதிர்கேள்வியும் எழுப்பாமல், அமைதிப்படைக்கும், பாசிச ராஜீவுக்கும் புகழ்மாலை சூட்டியவர்கள் இவர்கள் மட்டும்தான். இந்திய அமைதிப்படை திரும்ப வேண்டும் என்று வாதாடுபவர்களையும் விமர்சித்தார்கள். (—தீக். 11—11—86.)

கடைசியாக, அமைதிப்படைக்கு ஆதரவாக மனித சங்கிலி போராட்டம், தொடர் பிரச்சாரம் நடத்தவும் ஏற்பாடு செய்தார்கள்.

தேசீய இனப் பிரச்சினையில் இவர்களுடைய மார்க்சிய விரோத நிலைபாடுகளை (பார்க்க: புதிய ஜனநாயகம்) திரும்பவும் விளக்க நமக்கு பத்திரிக்கையில் பக்கம் இல்லை. குறைந்தபட்சம் இவர்கள் ஒட்டுப்பொறுக்க ஈழப் பிரச்சினையில் கொடுத்த வாக்குறுதிகளை யாவது காப்பாற்றினார்களா என்றால் அதையும் காற்றில் பறக்க விட்டார்கள். ராஜீவ் மாதிரியே முதலில் ஈழத்திற்கு இந்திய ராணுவத்தை அனுப்புவது அதன் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாகும்; அது அபத்தம் என்றவர்கள் இப்போது ஈழத்தில் இருக்கும் இந்திய ராணுவத்தை திரும்ப கோருபவர்களை விமர்சிக்கிறார்கள். அரசியல் மோசடியில் ராஜீவே இவர்களிடம் பிச்சை வாங்க வேண்டும்.

● மணி



படிப்பகம்

www.padippakam.com

# நவீன யுத்தப் பிரபுக்கள்

குணசேகரன்

"சார்... எங்க இன்ஸ்பெக்டர் லேடீஸ் விஷயத்துல கொஞ்சம் (?) வீக், மல்லிகாவோட கையைப் பிடிச்சிருக்கார். அது பளார்னு கன்னத்துல அடிச்சிடுச்சி. அந்த கோவத்த தீர்க்கத்தான் மல்லிகாவோட தம்பி மனோகரனை இந்த அளவுக்கு சித்திரவதை பண்றாரு"

வட ஆற்காடு மாவட்டம் வேலூர் தெற்கு காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர் தன்னுடைய மேலதிகாரி இளங்கோ என்ற இன்ஸ்பெக்டரைப் பற்றி கூறியவை இவை.

செப்டம்பர் மாதம் முழுக்க வேலூரில் பரப்பரப்பாக பேசப்பட்ட விஷயம் இது.

மனோகரன் வேலூர் ஆயுதப் படைப் பிரிவைச் சேர்ந்த இளம் போலீசு. மல்லிகா, இன்ஸ்பெக்டர் இளங்கோவின் கீழ்பணிபுரியும் பெண் போலீசு; மனோகரனின் தங்கை.

மல்லிகா, தன்னுடைய இச்சைக்கு இணங்க மறுத்ததால், இன்ஸ்பெக்டர் இளங்கோமல்லிகாவின் அண்ணன் மனோகரனின் மீது பாய்ந்தார்.

இரவு, இரண்டாவது ஆட்டம் சினிமா பார்த்துவிட்டு வீடு திரும்பிய ஆயுதப் படைப்பிரிவு போலீசு மனோகரனை இன்ஸ்பெக்டர் இளங்கோ வழியிலேயே மடக்கி கொண்டு ஜீப்பில் தூக்கி போட்டுக் கொண்டு சென்று போலீசு நிலையத்தில் வைத்து நிர்வாணப்படுத்தி அடித்திருக்கிறார். சாந்தி என்ற விபச்சாரப் பெண்ணை அழைத்து வந்து அவளையும் நிர்வாணப்படுத்தி மனோக்ரனுடன் இணையச் சொல்லி கொடுமைப் படுத்தியிருக்கிறார். இருவரும் மறுக்கவே, அவர்களை வெறும் உடம்புடன் இரவு முழுக்க வைத்திருந்து ரசித்து இருக்கிறார், இன்ஸ்பெக்டர் இளங்கோ.

இந்த அக்கிரமத்திற்கு எதிராக வேலூர் ஆயுதப்படைப்பிரிவு போலீசார் சக ஊழியர் மனோகரனுக்கு நீதி(!) கேட்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, இன்ஸ்பெக்டர் இளங்கோவை நாறடித்தபோதுகூட அதற்கு எல்லாம் அவர் அசரவில்லை. இந்த விஷயம் வெளியில் கொதித்துக் கொண்டிருக்கும் போதே இன்னொரு அபலைப் பெண்ணையும் சீண்டினார்.

தனியார் நூலகத்தில் வேலை செய்து கொண்டு, வயதான தன் ஆயாவுடன் தங்கியிருக்கும் பரிமளா என்ற பெண்ணை "விசாரணை"க்கு என்று சொல்லி வீட்டிலிருந்து நள்ளிரவில் நான்கு போலீசாரை வைத்து (இதில் இரண்டு பேர் பெண் போலீசுகள்) தூக்கி வந்திருக்கிறார். அவரை, காஜா லாட்ஜில் ஒரு அறையில்அடைத்து "ஏண்டி, உங்க 'லைப்ரரியில' செக்ஸ் புக்கெல்லாம் விக்கிறீங்களாமே" என்று மிரட்ட, "அதெல்லாம், இல்ல சார்..." என்று அந்த பெண் மிரள, "சரி, அத வுடு" என்று கூறி தன் இச்சைக்கு இழுக்க, அந்த பெண் மிரண்டு வெளியே ஓடி வர, வெளியில் காவல் இருந்த இரண்டு பெண் போலீசார், திரும்பவும் அப்பெண்ணை உள்ளே தள்ளி காவல் இருந்திருக்கிறார்கள்.

'இன்ஸ்பெக்டர்' இளங்கோவுக்கு, அதிகார பூர்வமான மேலதிகாரியாகவும், 'தொழில்' முறையில் 'மாமா'வாகவும்இருப்பவர் டி.எஸ்.பி ராமராஜன். இவர் வட ஆற்காடு மாவட்டசூப்பிரண்டெண்ட். தன்னுடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் ஒரு அதிகாரி இவ்வளவு அக்கிரமங்களையும் அரங்கேற்றி இருக்கிறார் என்று தெரிந்த பிறகு சூப்பிரண்டெண்ட் ராமராஜன் கூனிக்குறுகிப் போய்விட வில்லை. மாறாக அந்த அபலை பெண்களை "விபச்சாரிகள்" என்று நாக்கூசாமல் நக்கல் செய்தார். தன் சகாவுக்கும் முன்பாகவே பொறுக்கித்தனத்தில் கொட்டைப் போட்டவர் போலிருக்கிறது. எனவேதான் உள்ளூர்அளவிலான விபச்சாரிகளைக்கூட அவ்வளவு ஞாபகத்தோடு நினைவில் வைத்திருந்திருக்கிறார்.



இவ்வளவு பக்க பலங்கள் இருக்கும்போது இன்ஸ்பெக்டரிடம் 'நீதி' நிமிர்ந்து நிற்குமா என்ன? கூனிகுறுகித்தான் நின்றது. இன்ஸ்பெக்டர் இளங்கோ 'சார்'இன்னமும் வேலூரில்இன்ஸ்பெக்டராகத்தான் இருக்கிறார். அவருக்கு உறுதுணையாக ஒரு போலீசு. பெயர் அண்ணாமலை. அதிகார பூர்வமாக, இன்ஸ்பெக்டர் இளங்கோவுக்கு கீழ் பதவியில் இருந்தாலும் 'தொழில்' முறையில் வழிகாட்டி. பிணத்தையே புனர்ந்தவர் இவர். இவருக்கு 'டெட் பாடி' என்றபட்டபெயரேஉண்டு. போலீசில் சேருவதற்கு முன் மருத்துவமனையில் வார்டு பாய் வேலை பார்த்தவர். அங்குதான் இறந்த பெண் நோயாளியை புனர்ந்திருக்கிறார். அங்கு சீட்டு கிழித்தவுடன் பொருத்தமானவராக இருப்பதால் போலீசு துறை அவரை தத்து எடுத்துக் கொண்டது.

யுத்த பிரபுக்கள், குறுநில மன்னர்கள், அரசாண்ட மன்னர் கால வரலாற்றில் கேள்விப்பட்டிருப்பீர்கள்; பட்டத்திற்கு ஒருவளை அதிகாரபூர்வ மனைவியாகவும், படுக்கையறைக்கு தனியாக பல பெண்களையும் வைத்துக்கொண்டு பார் ஆண்ட பல பேரை. அரண்மனை, அந்தப்புரம், மணி மண்டபம், கொலு மண்டபம் எனத் தனித்தனியாக பல மண்டபங்களை எழுப்பிக் கொண்டு களிவெறியாட்டம் நடத்திய கதைகள் எல்லாம் கடந்த கால வரலாறாக ஆகிவிட வில்லை. நிகழ்கால நடப்புகளாக தினம் தினம் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கிறது. வேலூர் சம்பவம், கடலில் கரைத்த பெருங்காயம் மாதிரி; ஒரு துளியில் கோடியில் ஒரு பங்குதான்.

மன்னர் காலம் மறைந்து 'மக்களாட்சி' நடப்பதால், யுத்தப் பிரபுக்கள் காக்கி சட்டை அணிந்து 'காவலர்கள்'களாகவும் கறுப்பு, சிவப்பு, வெள்ளைபச்சை கரைப் போட்ட எம். எல்.ஏக்களாகவும், 'டிப்டாப்' உடையணிந்த தாசில்தார்களாகவும் பல வடிவங்களில் உலவுகிறார்கள். குறுகிய மன்னர்கள், ஆங்கிலம் படித்த அதிமேதாவிகளாக மாறி கலெக்டர்களாகவும், டி.எஸ்.பிகளாகவும், எம்.பி, மந்திரிகளாகவும்கண்ணைப்பறிக்கும் மாருதி பிளசர்களில் ஒய்யாரமாக வந்து இறங்குகிறார்கள். ராஜரிஷிகளாக தாடி வைத்துக் கொண்டு ராஜபரிபாலனத்திற்கு ஆலோசனை வழங்கியவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

இன்று நீண்ட கறுப்பு அங்கி கழுத்து பட்டையுடன் கனத்தபுத் தகத்தை சுமந்து கொண்டு நீதி மான்களாக வலம் வருகிறார்கள். வெளித் தோற்றங்கள்தான் மாறி இருக்கிறது. உள்ளடக்கம் எல்லாம் ஒன்றுதான்.

அந்தப்புரங்கள் எல்லாம் 'கெஸ்ட் அவுஸ்'களாகவும், பயணியர் விடுதிகளாகவும், விருந்தினர் மாளிகையாகவும் உருமாறி விட்டன. மணி மண்டபங்கள், வள்ளுவர் கோட்டங்களாகவும், கலைவாணர் அரங்கங்களாகவும் பெயர் மாறி இருக்கிறது. கொலு மண்டபங்கள், செயின் ஜார்ஜ் கோட்டையாகவும், 'செகரட்டேரியேட்'யாகவும், தலைமைச் செயலமாகவும், 'பார்லிமெண்ட்' கட்டிடமாகவும், 'ராஸ்ட்டிரபதி' பவனமாகவும் புதுப் புது பெயர்களில் அழைக்கப்படுகின்றன. மன்னர்காலத்திய ஆதிக்கம், மக்களாட்சியில் எந்தவிதத்திலும் மாறவில்லை.

கேட்டாலே பிரமிப்பும், பார்த்தால் வாய்பிளக்கவும் வைக்கும் உல்லாச உப்பரிகைகளில் இருந்து நாட்டை ஆளும் இந்த அதி நவீன யுத்தபிரபுக்களிடமும் குறுநில மன்னர்களிடம், ராஜரிஷிகளிடமும் நீதி, நேர்மை, நியாயம் கேட்டு கையேந்துவதற்கும்சொறி நாயைக் கட்டிதழுவவிரும்புவதற்கும் வித்தியாசம் ஏதும் இல்லை. இதற்கு உதாரணங்கள்தான், போலீசு துறையின் அக்கிரமங்கள்.

கீதா. நெல்லை மாவட்டம்—பணகுடியில் வசிக்கும் ஒரு அபலைப் பெண். கணவனால் கைவிடப்பட்டு, வீட்டு வேலை செய்து வயிற்றைக் கழுவிவரும் தாழ்த்தப்பட்டசாதியைச் சேர்ந்த கூலி ஏழை.

அவர் வேலை செய்து வந்த வீட்டில் 2½ பவுன் தங்க சங்கிலி திருடு போய் விட்டதற்காக விசாரிக்க வேண்டும் என்று காரணம் கூறி அவ்ரை இழுத்து சென்றது பணகுடி போலீசு.

விசாரணையும் இல்லை. சாட்சியும் இல்லை. அதற்கு எல்லாம் நேரமும் இல்லை, போலீசு வெறி நாய்களுக்கு. பணகுடி போலீசு நிலைய காக்கிசட்டை கயவாளிகள் உடனே கறுப்பு சட்டை 'நீதி'மான்களாக மாறி அந்த அபலைக்கு திருட்டு பட்டம் கட்டினார்கள். "செயினை இவள் முழுங்கி விட்டிருப்பாள்" என்று கெக்கலித்து சிரித்து நக்கல் செய்து கொண்டு அந்த அபலையை முழுவதுமாக நிர்வாணப் படுத்தி அவர் அடிவயிற்றில் காலால் மிதித்து இருக்கிறார் தங்கம் என்ற சப்இன்ஸ்பெக்டர்.



அபலைப் பெண் கீதா உடல் முழுக்க ரணங்களுடன், மருத்துவமனை இருக்கிறார்.

பிறகு இரண்டு போலீசாரை அடிவயிற்றில் பிறப்பு உறுப்பில் லத்தியால் குத்திக் கொண்டே "நகையை தேடுவதாக" கூறி கெக்கலித்து இருக்கிறார்.

மனித உருவில் இருந்த அந்த சொறிநாய்களுக்கு அப்போதும் வக்கிரம் தீரவில்லை. கைவிரல் நகக்கணுக்களில் சரமாரியாக ஊசியைக் குத்தினார்கள். அந்த அபலைபெண் சுயநினைவுஇழந்தவுடன், உடம்பில் தண்ணீரை ஊற்றி நினைவு திரும்ப வைத்து திரும்பவும் சித்திரவதையை தொடர்ந்திருக்கிறார் சப்இன்ஸ்பெக்டர் தங்கம். சித்திரவதையை தாளமுடியாமல், தன்னுடைய ஏழை சகோதரிகள் இருவரையும், ஒரு தூரத்து ஏழை உறவினரையும் குற்றவாளிகள் என்று பொய் சொல்லி இருக்கிறார். பணகுடி போலீசு அவர்களை இழுத்து வந்து மிரட்டியது. கடைசியில் "காணாமல் போன செயின் விட்டிலேயே இருப்பதாக" புகார் கொடுத்தவர் வந்து கூறிய பிறகும் அவர்களை வெளியில் விடவில்லை. இன்ஸ்பெக்டர் தான் நாளை வம்பில் மாட்டிக் கொள்ளாமல் இருப்பதற்கு அவர்களின் மீது ஏதாவது ஒரு குற்றசாட்டை சுமத்துவதற்கு வசதியாக மிரட்டி வெள்ளைத் தாள்களில் கையெழுத்து வாங்கிக்கொண்டு வெளியில் விட்டிருக்கிறார்.

செய்தி அறிந்து கொதித்து எழுந்த பணகுடி நகர மக்களிடமிருந்து, இன்ஸ்பெக்டரைக் காப்பாற்ற ஏகப்பட்ட சிபாரிசுகள்— இவருக்கு மேலதிகாரியான கேசரி ஜோசப் "கீதாவை நாங்க கொடுமைப் படுத்தியதற்குச் சாட்சி யார்?... எவன் பார்த்தான்?" என்று எகிறி பாய்ந்து, எதிர்கேள்வி எழுப்பி தங்கத்திற்கு பக்க துணையாக இருக்கிறார். நெல்லை மாவட்ட அ.தி.மு.க செயலர் கருப்பசாமி பாண்டியன் எடுபிடி ஒருவர் இன்ஸ்பெக்டர் கேசரி ஜோசப் வீட்டில் பாதுகாப்புக்கு இருந்துக் கொண்டு "நாங்க நெனைச்சா என்ன வேணும்னாலும் பண்ணுவோம்" என்று மிரட்டியிருக்கிறார். சொல்லியது மாதிரியே செய்து காட்டி விட்டார்கள். கீதாவிடம் வாங்கி கையெழுத்து போட்ட வெள்ளைத் தாளை வைத்து, வழக்கையே தலைகீழாக மாற்றினார்கள். புகார் கொடுத்தவர்தான், கீதாவை அடித்து நொறுக்கியதாக கீதாவே புகார் கொடுத்துள்ளதாக அனைவரிடம் காட்டி திரிகிறார் சப் இன்ஸ்பெக்டர் தங்கம். நகரமே திரண்டெழுந்தும், நாள்தோறும் பணகுடிக்குள் அவர் இறுமாப்புடன் வந்து போய் கொண்டுதான் இருக்கிறார். பண குடிமக்கள் நீதி(!) விசாரணைதானே கோருகிறார்கள், நேருக்கு நேர் சந்திக்கத் துணியவில்லையே என்ற தைரியம்!

அபலைப் பெண் கீதா உடல் முழுக்க ரணங்களுடன், பிறப்புறுப்பில் ரத்தம் கசிந்துக் கொண்டே இருக்க உடம்பில் புடவையைக் கூட சுற்றிக் கொள்ள முடியாமல், போர்த்திக் கொண்டு மருத்துவமனையில் கிடந்து இருக்கிறார்.

இன்ஸ்பெக்டர் கேசரி ஜோசப்பை பகுதிமக்கள் முழுமையாக தோலுரிக்காமல் விட்டு வைத்திருப்பதால், திமிரெடுத்து போய் இவ்வழக்கை முறையிட வருபவர்களிடம் அந்தப் பெண் கீதாவினுடைய பழைய வாழ்க்கை தெரியுமா? என்று ஆரம்பித்து கீதாவை பச்சை விபச்சாரியாக பிரச்சாரம் செய்து வருகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

மனிதர்கள் மிருகங்களை துன்புறுத்துவதுகூட தண்டனைக்குரிய குற்றம் என்று சட்டமியற்றி இந்நாட்டை ஆளும் 'அகிம்சா' மூர்த்திகளின் ஆட்சியில் இப்படியும் அக்கிரமங்கள் நடக்குமா? நாதியற்றவர்கள் என்பதாலேயே சக மனிதர்களை நாயினும் கேடாக மதிப்பவர்கள், கொஞ்சமும் கூச்சமும் இல்லாமல் மனித நாகரீகம் பற்றி வாய்கிழிய பேசுவார்களா, எப்படி?

வரலாற்றைப் புரட்டினால்தான் இவற்றிற்கு விடை கிடைக்கும்!

சாலை ஓரங்களில் மரங்களை வளர்த்து தம் மக்களுக்கு நிழல் தந்தார்கள்; அன்னதானங்கள் ஆயிரம் கட்டி சோறு போட்டார்கள். அதே தர்மவான்கள்தான், தம்மை கேள்வி கேட்டசொந்தமக்களைஎல்லாம் கழுமரம் ஏற்றினார்கள்; எதிர்ப்பாளர்களின் உடலை மட்டும் மண்ணில் புதைத்து தலையை யானைக் காலால் இடறிக் கொன்றார்கள் — இது மன்னர்கள் ஆட்சி.

எறும்புகளைக் கொல்வது கூட பாவம் என்று உபதேசம் செய்த, சாந்த சொரூபிகள், (ஜைன குருக்கள், இதற்காக கையில் ஒருநீண்ட துடைப்பானை வைத்துக் கொண்டு நடக்கும் இடம் எல்லாம் துடைத்துக் கொண்டு போவார்கள்) சக மனிதன் தனக்கு எதிராக திரும்பிய போது கல்லால் அடித்துக் கொள்வதையும், 'கண்ணுக்கு கண்; பல்லுக்கு பல்'' தண்டனையும் கூட நீதியை நிலைநாட்டும் உன்னத வழிமுறைகள் என்றார்கள்— இது மதவெறியர்களின் ஆட்சி.

''உலகத்தையே ஆளும் ஒப்பற்ற அறிவும், திறமையும்படைத்தவர்கள் எங்கள் இனத்து மக்களே'' என்று சொந்த மக்களை வானளாவ புகழ்ந்தவர்கள், தம் இனத்து மக்கள் தெளிந்து நின்று எதிர்ப்புக் குரல் எழுப்பியபோது, அவர்களை மொத்தமாக அடைத்து வைத்து நச்சுப் புகையைப் பீச்சி அடித்து கொடூரமாக கொன்றார்கள்; ஆசனவாயில் காற்றடித்து உடலை பாலூனாக ஊத வைத்து சாகடித்து அதைக்கண்டு ரசித்தார்கள்—இதுபாசிஸ்டுகளின் படுகொலை முறை.

இங்கே நடப்பது அதிநவீன மக்களாட்சி. எனவே இங்கே நிருபிக்கப்பட்ட குற்றவாளிக்குஅல்ல, விசாரணைக் கைதிக்கே விபரீதமான தண்டனைகள். சட்டம்— ஒழுங்கு, அமைதியை பாதுகாக்க சாட்சி, விசாரணை என்று நேரத்தை வீணடிக்க முடியுமா? எனவே சட்டம் ஒழுங்குக்குஇடையூறு செய்வார்கள் என்று கருதினாலே முதலில் அவர்களை பிண



மனோகரன்


மாக்கி விடுகிறார்கள். பிறகு சட்ட புத்தகத்தை ஓய்வாக புரட்டுகிறார்கள்.

''போலீசார் முன்கூட்டியே முன் எச்சரிக்கையுடன் செயல்பட்டிருந்தால் வன்னியர்போராட்டம் இந்த அளவு வளர்ந்திருக்காது'' என்று எதிர்கட்சி ஓட்டு சீட்டு அரசியல்வாதிகள் ஒரே அலைவரிசையில் குரல் எழுப்பி போலீசின் 'மெத்தன' போக்கை கண்டித்துக் கொண்டிருக்கும் போது, போலீசார் விட்டில் தூங்கிக் கொண்டா இருந்தார்கள்? இல்லை. முன்கூட்டியே முன் எச்சரிக்கையுடன் வேகமாக செயலாற்றவில்லைஎன்பதுஎன்னவோ உண்மைதான். ஆனால், அவர்கள் அப்படியும் ஏதோ கொஞ்சம் தங்களால் முடிந்ததை அந்த நேரத்தில் செய்தார்கள்.

''21-9-87 அன்று சுமார் 9.50 மணிக்கு ஆயுதம் தாங்கிய போலீசாரை ஏற்றிக் கொண்டு விக்ரவாண்டிக்குஅருகேயிருக்கும் பெரிய தச்சூர் எனும் கிராமத்துக்குள் ஐந்து வேன்கள் புழுதிபறக்க வேகமாக நுழைந்தன.

விளைவு: பெரிய தச்சூரைச் சேர்ந்த சிவகாமி என்ற வசதி மிக்க குடும்பத்தலைவி கூறுகிறார்

சித்ரா



''உன் புருஷன் ரோட்டில் போற வர்ற காரையெல்லாம்கொளுத்திக்கிட்டு இருக்கான். அதனாலஉங்க ரைஸ் மில்லைக் கொளுத்தணும். கொஞ்சம் மண்ணெண்ணெய் கொடுக்கிறீங்களா?'' என்று கேட்டு, கிராமத்திலுள்ள குடிசை முதல் மாடி வீடு வரை எல்லா வீடுகளுக்குள்ளும் நுழைந்து கண்ணில்படும் டி.வி., டூ இன் ஒன் (ஒலிப்பதிவும், ரேடியோவும் ஒன்றாக உள்ள சாதனம்) ரேடியோ, கண்ணாடி, அடுப்பு, சமையல் பாத்திரங்கள் என்று எல்லாவற்றையும் நொறுக்கினார்கள். பல கடைகளில் இருந்த பொருட்களையும், பணத்தையும் சூறையாடினார்கள்''.

பேரணி ஊர், விவசாய குடும்பத்தைச் சேர்ந்த சித்ரா என்ற இளம் சகோதரி கூறியது. ''புள்ள பெத்த நாலு நாள் கூட முழுசா ஆகாத நிலையில... வீட்டில யாரும் இல்லாதபோது சுமார் ஐம்பது போலீஸ்காரங்க என் வீட்டுக் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வந்து துப்பாக்கியால என்னை அடித்த அடிகளைவிட, பேசிய சுடுவார்த்தைகள் இன்னும் ஆற்றமுடியாத ரணங்களை எனக்கு ஏற்படுத்தியிருக்கின்றன. 'உனக்கெல்லாம் புள்ள ஒரு கேடா' என்று கேட்டு போலீஸ் அடித்தது. இது எனக்கு ஏற்பட்ட அசிங்கமாகத் தெரியவில்லை. போலீசின் கையாலாகாத்தனமாகவேதெரிகிறது'' என்றார்.

அதே ஊரில் மூன்றுவீடுகளை எரித்துச் சாம்பலாக்கியிருக்கிறது! போலீசு'' (ஜூனியர் விகடன்— 14.10.87)

''விசித்திரமானது'', ''ஏட்டிக்கிப் போட்டி'', ''போராட்டவாதிகள் (வன்னியர்கள்) நடத்திய அட்டகாசங்களைக் கண்டு ஆத்திரப்பட்டுத்தான் இது போன்ற பதில் அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்...'' என்று வெட்கமில்லாமல் எழுதி போலீசு கொடுமையை தம் வாசகனிடம்நியாயப்படுத்தியது மஞ்சள் ஏடு ஜூனியர் விகடன்.

'86 மார்ச் 12. திருப்பாபுலியூரிலிருந்து கடலூர் பேருந்து நிலையத்திற்கு வந்த தனியார் பேருந்து, அங்கு நிரந்தரமாக தேங்கிக் கொண்டிருக்கும் சாலை கழிவுநீரில் இறங்கிஏறியிருக்கிறது. கவனிக்காமல் நின்று கொண்டிருந்தவர்கள் மேல் எல்லாம் வழக்கம் போல சாக்கடை நீர் தெறித்து இருக்கிறது. அதில்ஒருவர் அவ்வூர் போலீஸ்காரர். இதை அறிந்த ஓட்டுனர் பன்னீர்செல்வம், முன்னெச்சரிக்கையாக அந்த போலீஸ்காரரிடம் தம் தவறுக்கு(?) மன்னிப்பும் கேட்ட பிற



படிப்பகம்

www.padippakam.com

கும் சமாதானம் அடையவில்லை அந்த போலீசு. டிரைவரை சீட்டிலிருந்து இழுத்து தரையில்தள்ளி தாறுமாறாக அடித்து பூட்ஸ் காலால் உதைத்தார். இதைப் பார்த்த பிற ஓட்டுனர்கள் பொங்கி எழுந்து நியாயம்(?) கேட்டனர். செய்தி அறிந்த கடலூர் போலீசு நிலையம் அப்படியே கால் முளைத்து மொத்தமாக அந்த இடத்திற்கு வந்தது. சம்மந்தப்படாத பெரியார் அரசு பேருந்து ஓட்டுநர்கள், பொது மக்கள் என்று அங்கு குழுமியிருந்தஅனைவருக்கும் தடியடி. கையில் கிடைத்தவர்களை போலீசார் கண்மூடித்தனமாக துப்பாக்கி சனியனியால் குத்தினார்கள். அதைத் தட்டி கேட்க வந்த பெரியார் போக்குவரத்துக் கழக மானேஜர் ஷி. கணேசனும் காயம் அடைந்தார். சக ஊழியர், மோகன்தாசுக்கு கையில் பலத்த கத்தி குத்து.

போலீசுடன், ரிசர்வ் போலீசும் சேர்ந்து பேருந்து நிலையத்தையே கதிகலங்க அடித்தனர். பேருந்து நிலையம் கலவரம் நடந்த அரைநாள் முழுக்க அவர்கள் கட்டுப்பாட்டின்கீழ்சென்றது. உத்தரவு வாங்காமல் அதனுள் யார் சென்றாலும் அடிதான். உடனடியாக சம்பந்தப்பட்ட போலீசு மீது கண்துடைப்பு நடவடிக்கை



தங்கையன் குடும்பத்தினர்

எடுத்து நிலைமையை போலீசு கட்டுப்பாட்டிலிருந்து, தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார் கடலூர் உதவி கலெக்டர் அம்புஜ்சர்மா.

இந்த சம்பவத்தில் போலீசு கும்பல் மொத்தமாக ஓட்டுநர்களை ஈயாக மொய்த்துக்கொண்டு 'பிடுங்கி' எடுத்ததற்கு காரணம் பேருந்துகளில் அவர்களை அடிக்கடி 'ஓசி'யில் பயணம் செய்ய அனுமதிக்கவில்லை என்ற 'கோபம்' தான்!

இந்த நவீன யுத்தப் பிரபுக்களும், சேனாதிபதிகளும் தம் கொடி பறக்கும் பிராந்தியத்திற்குள் பிரவேசிப்பவர்களிடமும், வசிப்பவர்களிடமும், அவர்களுடைய 'தொழில்'களுக்கும் வாழ்வுக்கும் தகுந்த வரிவிதிப்பது ஏதோ புதிதாக தோன்றிய ஒன்றல்ல. தொன்று தொட்டு அவர்கள் முன்னோர்கள் கிரமமாக செய்த அலுவல் அது ஒன்றுதான். அதைதான் இவர்களும் தொடர்கிறார்கள். தங்கள் பிராந்தியத்திற்குள் எதற்கெடுத்தாலும் இப்போதெல்லாம் ஏன்? எதற்கு? என்று கேட்கும் ராஜதுரோகிகள் அதிகமாக வளர்ந்து வருவதால், நவீன யுத்தப் பிரபுக்களும், சேனாதிபதிகளும், வரிவசூலிப்பதில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்தி கறாராக இருக்க வேண்டியிருக்கிறது.

வரிவசூலிப்பதை, 'லஞ்சம்', 'மாமூல்' என்று கொச்சைப்படுத்துவதை அவர்களால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. இருந்தாலும் இந்த சட்டவிரோதவார்த்தைகளை எல்லாம் அவர்களால் தடைசெய்ய முடிவதில்லை. அதற்கு பதில், நேரம் கிடைக்கும் போது அப்படி சொல்பவர்களுக்கு வேறு வகையில் தண்டனை கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

திருச்சி பொன்மலைப் பகுதியில் 40 வருடங்களாக கள்ள சாராயம்காய்ச்சுபவர் ,ஆலந்தூர் தங்கையன். வயதான காலத்தில் மனம் திருந்திதொழிலை திடீரென நிறுத்தி விட்டார். 'ஊறல்போட்டு'வியாபாரத்தை நடத்துமாறு'சேனாதிபதிகள் எவ்வளவோ ஊக்குவித்தும் தங்கையன் மறுத்து விட்டார். வந்தது கோபம், யுத்த பிரபுகளுக்கு. 14.6.87 நடு இரவில் 70 வயதுக்கும் மேலான அந்த பெரியவரைஇழுத்து சென்று "சாராயம் காய்ச்சியதை ஆறு மாசமா ஏண்டா நிறுத்தினீங்க" என்று கேட்டு, அவர் வாயில் நுரை தள்ளும் வரை அடிவயிற்றில் எட்டி உதைத்து கொன்று இருக்கிறது பொன்மலை போலீசு நிலையஇன்ஸ்பெக்டர்அர்ச்சுனன் தலைமையிலான போலீசு. அப்பெரியவரின் வயதான மனைவி, போலீசார் தம் கணவரை அடிக்கடி போலீசு நிலையத்திற்கு அழைத்துச் சென்று வைத்திருப்பது வழக்கமாகிவிட்ட விஷயம் என்பதால் கணவனை இழுத்துக் கொண்டு சென்ற மறுநாள் ஓய்வாக சோறு எடுத்துக் கொண்டு சென்று இருக்கிறார். செய்தியறிந்து அந்த வயதான தாயார் பதறி துடித்து அழத்தான் முடிந்தது. வயதான காலத்தில் திருந்தி வாழ நினைத்த துணையை இழந்து இரண்டு இளம் பெண்கள் ஒரு மகளுடன்நாதியற்றுவாழ்ந்து வருகிறார்.

விஷயம் வெளியே தெரிந்தவுடன் டி.எஸ்.பி விசாரணை என்று நாடகம் ஆடி, "தங்கையன் அளவுக்கு அதிகமாக சாராயம் குடிச்சதில் இருதயம்வெடித்து செத்து போய்விட்டார்" என்று தீர்ப்பு எழுதி விட்டார்கள், பாவிகள்.

அரசு பயங்கரவாதிகளான யுத்தப் பிரபுக்களையும், சேனாதிபதிகளையும் சட்டம் ஒழுங்கு அமைதியைப் பாதுகாக்கும் மக்களின் காவலர்களாக பிதற்றி திரிகின்றனர், நவீன ராஜரிஷிகளான துக்ளக் சோ கும்பல்கள். "அமைதியைக் கட்டிக் காக்கும் போலீசார், தவறு செய்தால் தட்டிக் கேட்கும் உரிமை நம்முடையது (!). ஆனால், 'போலீசு துறையையே கண்மூடித்தனமாக(?) ஏசித் தீர்ப்பதுதான் முற்போக்கு வாதம்' என்ற நினைப்பு இன்று பரவ ஆரம்பித்திருக்கிறது. இந்த நினைப்புக்கு நான் பலியாகமறுக்கிறேன்" (துக்ளக் 1.7.87)என்று ஓயாமல் போதிப்பதன் மூலம், ஆளும் வர்க்க நலன்களுக்கு அமைப்பு ரீதியில் திரட்டப்பட்ட வன்முறைக் கும்பலான போலீசை, மக்களுக்கானது என கூவி விற்றுவிட முடியும் என நம்புகிறார்கள்.

போலீசு துறையில் இங்கொன்றும், அங்கொன்றுமாக சிலர் தவறு செய்யலாம் அதைச் சரி செய்து விடலாம் என நம்ப சொல்கிறார்கள்.

போலீசிடம் சிக்கித்தவிக்கும், மக்களின் அன்றாட அனுபவங்களோ வேறு மாதிரியாக இருக்கின்றன. கிரிமினல் குற்றங்களையே தனது முழுநேரத்தொழிலாக கொண்ட கும்பல்தான் போலீசு. இது இங்கொன்றும் அங்கொன்றுமாக இல்லை. அதன் அடி முதல் நுனிவரை இப்படித்தான் அழுகி நாறுகிறது.

ஆட்சியாளர்களின் அடக்குமுறை கருவியான அரசு எந்திரத்தின் கூடவே, பல்லும் சில்லுமாக, நகமும் சதையுமாக இருக்கும் இவற்றை மொத்தமாக அடித்து நொறுக்குவதும், அதனிடத்தில் அனைத்து அதிகார மட்டங்களுக்கும் தேர்ந்தெடுக்கவும் திருப்பி அழைக்கவும் மக்களின் கரங்களில் அதிகாரத்தை குவிக்கும் புதிய ஜனநாயக புரட்சியை சாதிப்பது மட்டுமே இதற்கு தீர்வு. இதை உழைக்கும் மக்களின் அமைப்பு ரீதியான வன்முறையே வென்றெடுக்கும். ●



படிப்பகம்

www.padippakam.com



# ரீகனிடம் சரண்

# ராஜீவின் புதிய பேரங்கள்

"மாஸ்கோநகரப் போக்குவரத்து ஏற்பாடுகள் கோர்பசேவிற்கு மகிழ்ச்சியளிப்பதாக இல்லை. அவற்றை அவரே சோதித்தறியத் தீர்மானித்தார். காரோட்டியைப் பின்னாலே ஏற்றிக் கொண்டு அவரே காரை ஓட்டிச் சென்றார்; ஒரு சிகப்பு விளக்கைத் தாண்டி ஓட்டிச் சென்றார்; யாரும் அவரைத் தடுக்கவில்லை. அடுத்த சிவப்பு விளக்கையும் தாண்டிப் போனார்; அப்போதும் ஒன்றும் நடக்கவில்லை. அடுத்து தடை செய்யப்பட்ட திசையில் காரைத் திருப்பினார்; ஆனாலும் போலீசார் அவரைக் கண்டு கொள்ளவில்லை.

கோபத்தோடு காரிலிருந்து இறங்கினார் கோர்பசேவ். 'சாலை விதிகளை மீறியதற்காக என்மீது ஏன் நீ நடவடிக்கை எடுக்கவில்லை? நான் யாரென்று உனக்குத் தெரிந்ததனாலா? சட்டத்துக்கு அப்பாற்பட்டவர் யாருமே கிடையாது என்ற ஒரு வெளிப்படையான சமூகத்தில் நீ இப்போதில்லையா?' என்று போலீசுக்காரனிடம் கேட்டார். 'ஆமாம் நீங்கள் யாரென்று எனக்குத் தெரியும். ஆனால் அந்தக் காரணத்திற்காக உங்கள் மீது நடவடிக்கை எடுக்காமலில்லை. பின்னால் உட்கார்ந்து வரும் ஆளைப் பற்றித்தான் நான் பயப்பட்டேன். கோர்பசேவையே தனது காரோட்டியாகக் கொண்டுள்ள அவர், அவர் உண்மையிலேயே முக்கியப் புள்ளியாகத்தானிருக்க வேண்டும் என்று எண்ணிவிட்டேன்' என்று போலீசுக்காரன் பதில் சொன்னான்.

—இது விருந்து கொடுத்தவர் அடித்த 'ஜோக்.''

"பொதுச் செயலாளர் ஆன பிறகு தனது மகன் எவ்வளவு நல்லது செய்தான் என்று வயதான அவரது தாயிடம் காட்டிக் கொள்வதற்காக பிரஷ்நேவ் மிகவும் ஆடம்பரமான ஒரு காரை அவருக்கு அனுப்பினார். ஆனால் அவளோ அதைப் பார்த்ததும் கதறி அழுதாளாம். பிறகு அவரது தாயைத் தனது ஆடம்பர மாளிகைக்கு அழைத்துப் போனார். ஆனால் அவளோ தொடர்ந்து அழுது கொண்டே இருந்தாள். கவலையுற்ற பிரஸ்நேவ் 'ஏம்மா இப்படி அழுது கொண்டே இருக்கிறாய்' என்று கேட்டார். 'எனது மகனே! உன்னைப் பற்றித்தான் நான் கவலைப்படுகிறேன். கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்தால் உனக்கு என்ன நேருமோ' என்று பிரஷ்நேவின் தாய் அழுது கொண்டே சொன்னாள்.

—இது இந்திராவிடம் பிரஷ்னேவ் சொன்னது என்று விருந்தாளி பதிலுக்கு அடித்த ஒரு 'ஜோக்.'

"ருமேனியப் பிரதமர் நிக்கோலாய் சிஸேஸ்கூ ஒருமுறை மாஸ்கோவுக்குப் பயணம் செய்தார். ருஷ்ய டீயா சீன டீயா, எதுவேண்டும் உங்களுக்கு என்று ருஷ்யர்கள் கேட்டார்கள். எனக்கு காபி வேண்டும் என்று அவர் பதில் சொன்னாராம்.''

—இது விருந்தாளியுடன் வந்திருந்த ஒரு எடுபிடி அடித்த 'ஜோக்.'

ஒவ்வொரு முறையும் விருந்து மண்டபமே அதிர்ந்ததாம்! வந்திருந்த அத்தனைபேரும் இந்த 'ஜோக்கு'களைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தார்களாம். விருந்து நடந்த இடம் அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையில் உள்ள குடும்ப உணவறை! முதல் 'ஜோக்' அடித்தவர் விருந்துகொடுத்த அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகன். இரண்டாவது 'ஜோக்' அடித்தவர் விருந்தாளியான இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி. மூன்றாவது 'ஜோக்' அடித்தவர் ராஜீவின் எடுபிடி இந்திய வெளியுறவுச் செயலாளர் கே. பி. எஸ். மேனன்.

உயர்ரக மதுவை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தார்கள். வகை வகையான உணவுகளை ருசித்தார்கள். விருந்து மண்டபமே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிப் போனது. அதே நாளில் அக்டோபர் 20ந் தேதி இலங்கையில் ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்தது இந்திய இராணுவம். கொட்டும் மழை யாழ்நகரைச் சேறும் சகதியுமாக்கியிருந்தது. அவற்றோடு ஈழத் தமிழர்களின் இரத்தமும் சதையும் கண்ணீரும் கலந்து சிவந்து கொண்டிருந்தது.

"சமீபத்தில் நியான் செங் என்ற 72 வயது சீனக் கிழவியைச் சந்தித்தேன். அவள் சீனாவில் பல ஆண்டுகள் சிறையிலடைக்கப்பட்டிருந்தாள். 'ஷங்காய் நகரில் வாழ்வும் சாவும்' என்றொரு புத்தகத்தை அவள் எழுதியிருக்கிறாள்'' என்று ரீகன் சொன்னார்.

ரீகனைக் குஷிப்படுத்த வேண்டுமே! "நட்வர்சிங், மேனன், பி. கே. சிங் ஆகிய மூவரும் அந்தப் புத்தகத்தைப் படித்திருக்கிறார்கள். ஒரே புத்தகத்தைப் படித்த மூன்று பேரைக் கொண்டுள்ள எத்தனை தூதுக் குழுக்களை உலகில் பார்க்க முடியும்? நமக்குள் பொதுத்தன்மைகள் நிறையவே இருக்கின்றன'' என்றார் ஒரு இந்தியத் தூதுக்குழு உறுப்பினர்.

உண்மைதான்! அவர்களுக்குள் பொதுத் தன்மைகள் ஏராளமாக இருக்கின்றன. சாராய— விருந்து வாசனைகளையும் மீறிய ருஷ்ய—சீன எதிர்ப்பு நெடி அங்கே வீசியது. ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களுடைய தரகர்களுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

உள்ள பொதுத்தன்மைகள் கல்வி—கலாச்சாரம், வாழ்க்கை முறைகள், அரசியல் சித்தாந்தம் மட்டுமல்ல, கம்யூனிச எதிர்ப்பு ஆகியவையும் அவற்றில் அடங்கும். எனவேதான் இந்தியத் தரகு கும்பல் ரீகன் முன்பு இளிக்க இளிக்கப் பேசியது.

இதே ராஜீவ்தான் ஐந்து மாதங்களுக்கு முன்பு புது டில்லி அரசுத் தலைவர் மாளிகையின் முன்னாலுள்ள "போட் கிளப்" மைதானத்தில் லட்சக்கணக்கானோரைக் கூட்டினார். நாட்டைச் சீர்குலைக்க முயலும் வெளிநாட்டுச் சக்திகள் மீது சீறிப்பாய்ந்தார். நேரடியாகப் பாகிஸ்தானைக் குறிப்பிட்டு அதன் பின்பலமாக உள்ள அமெரிக்காவைப் பார்த்துச் சொன்னார், "நாட்டை சீர்குலைக்க முயன்றால் பாகிஸ்தானின் எஜமானர்கள் (அமெரிக்கா) அவர்களுடைய ஆத்தாவழிப் பாட்டியையும் ஞாபகப்படுத்திக்கொள்ளும் அளவுக்குப் பதிலடி கொடுப்போம்." சாதாரணமாகத் தெருச் சண்டையில் பேட்டை ரௌடிகளுக்குள் அடிக்கும் கொச்சையான இந்தி மொழிச் சவடால் இது. அப்போது ராஜீவுக்கு அவசியமாயிருந்தது.

* ராஜீவ்–ஜெயில்சிங் தகராறும் அதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் ராஜீவ் புளுகியும் அம்பலப்பட்டுப் போயிருந்தார்.

* மேற்கு வங்க, கேரள மாநில இடைத்தேர்தல்களில் பாசிச ராஜீவ் கும்பல் மண்ணைக் கவ்வியிருந்தது. அடுத்து வர இருந்த அரியானா தேர்தலில் தோல்வி ஜுரம் கண்டிருந்தது.

* ராஜீவ்கும்பலின் முக்கிய புள்ளிகள்—அவரது பினாமிகள் வெளிநாடுகளில் பெருமளவு கருப்புப் பணத்தைக் குவித்திருப்பதாக ஃபேர்ஃபாக்ஸ் விவகாரம் அம்பலப்படுத்திவிட்டது.

* ஜெர்மன் நீர் மூழ்கி மற்றும் சுவீடன் பீரங்கி பேரங்களில் கோடி கோடியாக பாசிச ராஜீவ் கும்பல் லஞ்சம் வாங்கியிருந்தது வெளிவந்துவிட்டது.

* காங்கிரசுக் கட்சிக்குள் பிளவு வெடித்து ராஜீவ்கும்பலைக் கவிழ்த்து விட்டு ஆட்சியைப் பிடிப்பதற்கான சதிகளில் பகிரங்கமாகவே சிலர் இறங்கினர்.

* ராஜீவ்கும்பல் ஏற்படுத்தியிருந்த புதிய மாயைகள் நொறுங்கி பங்குச் சந்தையில் வீழ்ச்சியும் அதைத் தொடர்ந்து மேலும் கடுமையான பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டது. மூன்றாவதாண்டாக நீடித்த வறட்சி அதைத் தீவிரமாக்கியது.

—இந்தக் குற்றங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முழுப்பொறுப்



வான்கூவர் காமன்வெல்த் மாநாட்டில் ராஜீவ் தாட்சருக்குத் துதிபாடும் வேலையே செய்தார்.

பேற்க வேண்டியது, ராஜீவ் கும்பலே! ஆனால் இவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அது தனது மூதாதையரான நேரு—இந்திரா வகுத்தபாதையிலேயே நடையைக் கட்டியது. முற்போக்கு, சோசலிசம், பொதுத்துறை, ஏகாதிபத்திய எதிர்ப்பு முகமூடியை எடுத்துப் போட்டுக்கொண்டது. தேசிய ஒருமைப்பாடு, ஐக்கியம், மதச் சார்பின்மை ஆகியவற்றுக்குவகுப்புவாத பிளவுவாத, பிற்போக்கு சக்திகளிடமிருந்து ஆபத்துஎன்றுகூச்சல் போட்டது.

"பிரதமரின் புதிய கொள்கைகள் தமக்குச் சாதகமாக இருக்குமென்று தவறான வியாக்கியானம் செய்து கொண்ட ஏகாதிபத்தியவாதிகள் இந்த நாட்டைத் தமது மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வர முயன்றனர். அது முடியாமற்போனது. அத்துடன் கூட்டுச்சேரா நாடுகள், காமன்வெல்த் நாடுகள், தெற்காசிய நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் ஆகியவற்றில் ராஜீவ் ஆற்றிய நிறவெறி, இனவெறி, ஏகாதிபத்திய எதிர்ப்புத்தலைமைப் பாத்திரத்தால் ஆத்திரமுற்று சில வெளிநாட்டு சக்திகள் உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளைத் தூண்டிவிட்டு நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க முயலுகின்றன" என்ற பல்லவியைத் திரும்பத்திரும்ப பாடினர். குறிப்பாக ஜெயில்சிங்—வி.பி.சிங்—கோயங்கா — அருண் சௌரி—ஆர்.எஸ்.எஸ் — சீக்கியத் தீவிரவாதிகள் ஆகியோர் மூலம் பாகிஸ்தானும் அமெரிக்காவும் சதி செய்வதாக, இன்னும் குறிப்பாக ராஜீவின் ஆட்சியைக் கவிழ்க்க சி.ஐ ஏ. சதி என்று பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டினார்கள்.

சி.ஐ ஏ—அமெரிக்காவின் அதிரடி உளவுப்படை. ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனிய எதிர்ப்பு தேசிய விடுதலைத் தலைவர்களையும் கம்யூனிசப் புரட்சித் தலைவர்களையும் படுகொலை செய்வதற்காக உருவாக்கப்பட்டது. ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்படாது சுதந்திரமாக ஆள விரும்பும் ஆட்சிகளைக் கவிழ்ப்பதற்காக எதிர்ப்புரட்சி செய்வது அதன் வேலை. தெற்கு வியத்நாமில் நடந்ததைப்போல தனது அடிவருடிகளிலேயே ஒரு பிரிவை ஒழித்து விட்டு மற்றொரு பிரிவை ஆட்சிக்குக் கொண்டு வரும் சதிகாரக் கூட்டம். மலேசிய கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவனர்களில் ஒருவரான — பொதுச் செயலாளரையே விலைபேசி வாங்கிவிட்டதைப் போன்று சி. ஐ. ஏ. உளவாளிகள் அங்கிங்கெனாதபடி எங்கும் ஊடுருவியிருக்கிறார்கள்—இது உலகமறிந்த உண்மை.

உலகப் பொதுப் பொருளாதார நெருக்கடிகளும், அவற்றின் விளைவான இரு உலகப் போர்களின் அழிவுகளும் முதலாளித்துவ உலகின் அவலங்களை வெளிப்படுத்தின. ருஷ்ய—சீனப் புரட்சிகளின்மகத்தான வெற்றியும், சோசலிச சமூகத்தின் நிர்மாணமும், இட்லர் — முசோலினி ஆகிய பாசிஸ்டுகளுக்கு எதிரான செஞ்சேனையின் வெற்றியும் சோசலிசத்தின் மீது உலக மக்களிடையே அசைக்க முடியாத நம்பிக்கையை ஏற்படுத்தின. ருஷ்யாவில் க்ருச்சேவ்—பிரஷ்நேவ் கும்பலும், சீனாவில் தெங்சியாவோ பிங் கும்பலும் எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம்மீண்டும் முதலாளித்துவத்தை நிலைநாட்டி இருப்பினும் சோசலிசம் தான் முதலாளித்துவ உலகின் நெருக்கடிகளுக்கு ஒரே தீர்வு—இதுவும் உலகறிந்த உண்மை.

எனவே மக்களுக்கு அமெரிக்க சி. ஐ. ஏ மீதுள்ள வெறுப்பையும், சோசலிசத்தின் மீதுள்ள பற்றையும் பயன் படுத்திக் கொண்டு பாசிச ராஜீவ் கும்பல் தனது கிரிமினல குற்றங்களில் இருந்தும் அரசியல்—பொருளாதார நெருக்கடிகளிலிருந்தும் தப்பித்துக் கொள்ள முடிவு செய்தது. 1980 –இல் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு சோசலிச கவர்ச்சிச் சரக்குகளை மூட்டை கட்டி வைத்து விட்டு அமெரிக்க—மற்றும் மேற்கு ஏகாதிபத்திய சார்பு பொருளாதாரப் பாதையில்நடக்கத் தொடங்கியிருந்தது பாசிச இந்திரா கும்பல். 1984 இல் ஆட்சிக்கு வந்த ராஜீவ் கும்பல் மேலும் தீர்க்கமாக முடிவு செய்து பல புதிய கொள்கைகளை அறிவித்து அதே பாதையில் எட்டி நடைபோட்டது. எனவே ஊழல் குற்றச் சாட்டுகளில் இருந்தும் நெருக்கடிகளிலிருந்தும் மீள்வதற்காக எடுத்த தற்காலிக முடிவுதான் சி. ஐ. ஏ பூச்சாண்டியும், முற்போக்கு முகமூடியும்.

ஆனால் ருஷ்ய சமூக ஏகாதிபத்திய வாதிகளும் அவர்களுடைய இந்திய அடிவருடிகளும் ராஜீவ் கும்பலின் இக்கட்டான நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு அதைக் தம் பக்கம் இழுத்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கினர். வலியப் போய் ராஜீவ் கும்பலைத் தழுவிக்கொண்டனர். நம்பூதிரிபாடு, டாங்கே, ராஜேஸ்வரராவ் முதலிய போலிக் கம்யூனிஸ்டுகள் முதல்



படிப்பகம்

www.padippakam.com

அக்பர், கரஞ்சியா, டி. ஆர். ராமசாமி முதலிய பிழைப்புவாதிகள் வரை அத்தனை ருஷ்ய அடிவருடிகளும் பாசிச ராஜீவ் கும்பலுக்கு முன்னே அணிவகுத்து நின்றனர். அரசுத் தலைவர் தேர்தலில் காங்கிரசுப் பிளவைத்தவிர்த்து ராஜீவின் எடுபிடி வெங்கடராமனை வெற்றி பெறச் செய்வது முதல் ராஜீவ் ஆட்சிக் கவிழ்ப்புக்கு சி. ஐ. ஏ. சதி செய்வதாக பொய்யான ஆவணம் தயாரிப்பது வரை சகல வழிகளிலும் ராஜீவ் சார்பில் போராடினர். ஜெயவர்த்தனேக்கு எதிராக ஈழப் போராளிகளை ராஜீவ்கும்பல் பயன்படுத்தியவரை ஜெயவர்த்தனே ஒரு அமெரிக்கக் கைக்கூலி, சிங்கள இனவெறியன், சி. ஐ. ஏ—மொசாத் உளவாளி என்று ஏசியது இந்தக் கும்பல். ராஜீவ் ஜெயவர்த்தனே கூட்டுச் சேர்ந்து கொண்டு ஈழத்தமிழர்களுக்கு எதிராக ஆக்கிரமிப்பு கொலை வெறியாட்டத்தைத் துவங்கியவுடன் ஜெயவர்த்தனே ஒரு ஜனநாயக—சமாதான நாயகன், புலிகள் சி. ஐ. ஏ—மொசாத் கைக்கூலிகள், கொலை வெறியர்கள் என்று சொல்லி திடீர் 'பல்டி' அடித்தனர். "ஊழல் குற்றச்சாட்டுகளைக் கண்டு கொள்ளாதீர்கள்; வகுப்பு வாதம், வறட்சி, வெள்ள நிவாரணம் ஆகியவற்றுக்கு கவனத்தைத் திருப்புங்கள்" என்று ராஜீவுக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகள் சொன்னார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் கழுதையைக் குதிரையாகக் காட்டி ஏய்ப்பதற்காக—ராஜீவுக்கு முற்போக்கு, சோசலிச சாயம்பூசி—தன்னால் இயன்றவரை ஒப்பனை செய்தார்கள். ஆனால் சமயம் வந்ததும் கழுதை ஒப்பனைகளை உதறி விட்டு மீண்டும் தெருப் பொறுக்கப் போய்விட்டது. அதாவது மீண்டும் அமெரிக்கத் தாசர்களிடம் போய் பல்லிளித்துக் கொண்டு நிற்கிறது.

● வட மாநிலங்களில் வெடித்துப் பரவிய வகுப்புக் கலவரங்கள் பலநூறு பேர் உயிரைக் காவு கொண்டது. அங்கெல்லாம் போய் சிறுபான்மை இனத்தின் பாதுகாவலனாக ராஜீவ் பகல்வேடம் போட்டார்.

● நாட்டில் மூன்றில் இரண்டு பங்கு வறட்சியும் எஞ்சிய பகுதியில் வெள்ளமும் ஏற்பட்டு மக்களது அன்றாட வாழ்க்கையே நிலைகுலைந்து போனது. அங்கெல்லாம் மனைவியுடன் போய் நிவாரண வாக்குறுதிகளை வீசினார் ராஜீவ்.

ராஜீவ் கும்பலின் ஊழல் குற்றங்களையும் நெருக்கடிகளையும் பயன்படுத்திக் கொண்டு மக்கள் எழுச்சியைக் கட்டி அமைத்து ஒரு தேசிய மாற்றை உருவாக்குவது என்ற எதிர்க்கட்சிகளின் முயற்சிகள் கேலிக் கூத்தாக முடிந்தன. போலிக் கம்யூனிஸ்டுகள் ராஜீவின்



சீக்கியத் தீவிரவாதிகளிடமிருந்து தப்பிக்க வெளிநாட்டிலும் ராஜீவுக்கு இறுக்கமான பாதுகாப்பு.

இரகசியக் கூட்டாளிகளாக இருந்து இதைச் சாதித்தனர்.

● ராஜீவ் கும்பலின் ஊழல் குற்றச்சாட்டுகளை அம்பலப்படுத்திவந்த எதிரணியின் முக்கிய ஆயுதமான 'எக்ஸ்பிரஸ்'—ன் சொந்த குற்றங்களை சாக்காக வைத்து ராஜீவ் தொடுத்த தாக்குதல் அதை கணிசமான அளவு முடக்கியது.

● ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தம், இந்திய இராணுவ இலங்கை ஆக்கரமிப்பு ஆகியவற்றுக்கு கருணாநிதி, நெடுமாறன், வீரமணி கட்சிகளின் நீர்த்துப்போன எதிர்ப்பு தவிர பெரும்பான்மையான ஓட்டுக் கட்சிகளின் ஆதரவு கிடைத்தது. தமிழ்நாடு தவிர வேறெங்கும் எதிர்ப்பு இல்லை. இரு வல்லரசுகளுமே ஆதரவு தெரிவித்துள்ளன.

மேற்கண்ட காரணங்களினால் தமது மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை மக்கள் மறந்து விட்டார்கள்; நெருக்கடிகளில் இருந்து தாம் மீண்டுவிட்டோம் என்று ராஜீவ் கும்பலுக்குப் பிரமை தட்டியுள்ளது. எனவே புதிய பொருளாதாரக் கொள்கை, புதிய கல்விக்கொள்கை புதிய மருந்துக் கொள்கை, புதிய தொழிற் கொள்கை, ஐந்து நட்சத்திரக் கலாச்சாரம் ஆகிய அமெரிக்கா மற்றும் பிற மேற்கு ஏகாதிபத்திய சார்புப் பாதையில் மீண்டும் நம்பிக்கையுடன் நடைபோடத் துவங்கிவிட்டது. உள்நாட்டுக் கொள்கைகளில் பிற்போக்கு, வெளிநாட்டுக் கொள்கைகளில் முற்போக்கு என்று சொல்லி பாசிச ராஜீவ் கும்பலுடன் மீண்டும் அசிங்கமான ஒரு கூட்டுச் சேருவதைத் தவிர போலிக் கம்யூனிஸ்டுகளுக்கு வேறு வழியில்லை.

அமெரிக்க— பாகிஸ்தான்— சி. ஐ. ஏ—சதி என்று ராஜீவ் கும்பல் போட்ட கூச்சலிலே ருஷ்ய சமூக ஏகாதிபத்திய அடிவருடிகள்தாம் ஏமாந்து போயினரே தவிர இந்திரா—ராஜீவ் கும்பலின் நடத்தைகளைத் தொடர்ந்து கவனித்து வந்தவர் எவரும் ஏமாந்துவிடவில்லை. 1982இலேயே ரீகனுடன் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையில் கருத்தொற்றுமை ஒப்பந்தம் போட்டுக் கொண்டார் இந்திரா காந்தி. 1985 பயணத்தின் போது ரீகனுடன் மேலும் பல ஒப்பந்தங்கள் போட்டுக் கொண்டார் ராஜீவ் காந்தி. உலக வங்கி மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் நிபந்தனைகள்—வழிகாட்டுதலின் கீழ் நாட்டின் பொருளாதாரம் ஏற்கனவே அடகு வைக்கப் பட்டு விட்டது. இதற்கெல்லாம் முக்கிய காரணம் அவசரநிலை ஆட்சியிலும் அதற்கு முன்பும் இருந்தது போல டி. பி. தார், பி. என். அக்சர், குமாரமங்கலம் போன்ற பலமான ருஷ்ய அடிவருடிக் கூட்டம் இப்போது ஆளும் கும்பலுக்குள் இல்லை. மாறாக பொருளாதாரம், திட்டமிடுதல், அறிவியல், இராணுவம், அரசு தந்திரம் மற்றும் அனைத்துத் துறையிலும் மேற்கு ஏகாதிபத்தியச் சார்பு கல்வி கலாச்சாரம் — பயிற்சி பெற்ற அதிகார வர்க்க—அரசியல் கும்பல் தான் ராஜீவைச் சுற்றி உள்ளது. பொருளாதாரத் துறையில் எல். கே. ஜா, மன்மோகன்சிங் அலுவாலியா; அறிவியல், மற்றும் தொழில்நுட்பத் துறையில் சாம் பிட்ரோடா —அருணாச்சலம்; இராணுவத் துறையில் தளபதிகள் — குறிப்பாக சுந்தர்ஜி, கலாச்சாரத் துறையில் ரோமி— ராஜீவ் சேத்தி—பாபுல் ஜெயகர், தொழில் துறையில் தாபர், விவேக், தடாணி,அம்பாணி; நிர்வாகத்துறையில் சிதம்பரம், செய்தி மக்கள் தொடர்புக்கு சாரதா பிரசாத், மணி சங்கர் ஐயர், சுமன் துபே ஆகிய இவர்கள் அத்தனைபேரும் அமெரிக்க சார்புவாதிகள். கட்சியிலோ அமெரிக்க சார்பு மற்றும் அரசியல் பிழைப்புவாதிகளே நிரம்பியுள்ளனர். விதிவிலக்காகவே இப்பொழுது ருஷ்ய அடிவருடிகள் எஞ்சியுள்ளனர்.

இவர்களில் பலரும் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய—கல்வி—கலாச்சார பயிற்சி பெற்றவர்கள். ஏற்கனவே 18000 இந்தியமாணவர்கள் அமெரிக்காவில் படிக்கிறார்கள். பெரும் முதலாளிகள், அதிகார வர்க்கத்தின் மற்றும் அரசியல்வாதிகளின் வாரிசுகள் இவர்கள். ருஷ்ய அடிவருடிகள் கடுமையாக எதிர்த்த போதும் இந்த கும்பல் பாகிஸ்தானுடன் அணு ஆயுதத் தடுப்பு ஒப்பந்தம் போடும்படி ராஜீவுக்குயோசனை சொல்லுகிறார்கள். ரீகனின் தயவின்றி "காலிஸ்தான்" சீக்கிய தீவிரவாதிகளை அடக்க முடியாது என்று ஓதுகின்றனர். சி.ஐ.ஏ பூச்சாண்டியை ராஜீவ் கும்பல் பெரிதாகக் கிளப்பிக் கொண்டிருக்கும்போதே, போபால் விஷவாயுப் படுகொலை வழக்கு தீராதபோதே அமெரிக்காவுடன் தடுப்பு ஊசி ஒப்பந்தம் போட்டு இந்திய மக்களைக் கொல்லுவதற்கான லைசென்சு வழங்குகிறது ராஜீவ் கும்பல்.

போபால் விஷவாயு படு கொலை வழக்கை நீதிமன்றத்



படிப்பகம்

துக்கு வெளியே தீர்த்துக் கொண்டு அற்பத் தொகையை நட்டஈடாகப் பெற்றுக் கொள்ளப் பேரம் பேசுகிறது ராஜீவ் கும்பல். எல்லாவற்றுக்கும் மேலாக அமெரிக்காவின் ஹார்வார்டு பல்கலைக் கழகத்தில் நிர்வாகத் துறைப் பட்டம் பெற்றவர் துணை மந்திரி சிதம்பரம். இந்திய ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளின் பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் ஐ.ஏ.எஸ் ஐ.பி.எஸ்அதிகாரிகளை அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் பயிற்சிபெற அனுப்புவது என்று முடிவு செய்துள்ளார். இவ்வளவு நாள் சி.ஐ.ஏ பூச்சாண்டி காட்டி கூச்சலிட்ட ராஜீவ் கும்பல் இப்போது இந்திய போலீஸ் அதிகாரிகளை பயிற்சிக்காக அமெரிக்கா அனுப்புகிறது. எதற்காக? சி.ஐ.ஏவின் தலைமை அமைப்பான (ஃபெடரல் பீரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன்) எஃபி.ஐயிடம் பயிற்சிபெற, சி.ஐ ஏவின் கூடாரம் என்று நம்பப்படும் ஹார்வர்டுபல்கலைக் கழகத்திற்கு இந்திய நிர்வாக அதிகாரிகளை அனுப்புகிறது.

அரசியல் மேடைகளில், கட்சித் தீர்மானங்களில், நாடாளுமன்ற சவடால்களில் ஒருபுறம் சி. ஐ. ஏ. பீதி கிளப்பிக் கொண்டே, முற்போக்கு சோஷலிச நாடகமாடிக் கொண்டே பாசிச ராஜீவ் கும்பல் அமெரிக்காவுடன் கள்ளத்தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறது. இந்திய வர்த்தகக் கூட்டமைப்பில் அக்டோபர் 9ந் தேதி அமெரிக்கத் தூதர் குந்தர்டீன் உரையாற்றிய பொழுது தெளிவாகவே பல உண்மைகளைச் சொன்னார். பாசிச ராஜீவ் கும்பலுக்கு வீசப்பட்ட கவர்ச்சி வலை இது.

● "நமது (இந்திய—அமெரிக்க) தேசிய அடிப்படை நலன்கள் ஒத்துப் போகக் கூடியவை மட்டுமல்ல, ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பவை. ராஜீவும் ரீகனும் ஒரு சொந்த உறவை நிறுவி உள்ளார்கள்; அது உலகின் இரண்டு பெரிய ஜனநாயக நாடுகளிடையேயான உறவைப் பலப்படுத்த அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

● இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தகக் கூட்டாளி அமெரிக்கா. அதாவது இருதரப்பு ஆண்டு வர்த்தகம் 4800 கோடி ரூபாய். மற்ற கூட்டாளிகள் குறிப்பாக ருஷ்யாவைப் போல அல்லாது அமெரிக்க வர்த்தகத்தினால் 900 கோடி ரூபாய் உபரியாக அந்நியச் செலாவணி இந்தியாவுக்கு உள்ளது. அத்துடன் இந்தியா ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு நாடுகளில் இருந்து பெரும் நிதி மூலாதாரங்களில் 1200 கோடி ரூபாய்க்கு மேல் அமெரிக்காவிலிருந்து வருகிறது.

● புதிய தாராளவாத பொருளாதார கொள்கைகள், தொழில்நுட்ப



சி.ஐ ஏவின் கூடாரம் ஹார்வார்டுபல்கலைக் கழகத்திற்கு இந்திய நிர்வாக அதிகாரிகளை அனுப்புகிறது.

பரிமாற்றத்துக்கான புதிய ஒப்பந்தம் ஆகியவை காரணமாக இந்தியாவில் நல்ல தொழில் சூழ்நிலைமைகள் இருப்பதாக அமெரிக்கக் கூட்டுப் பங்குக் கம்பெனிகள் அங்கீகரித்துள்ளன. முந்திய பத்தாண்டுகளில் மூலதனமிட்டதைவிட அதிகமாக கடந்த இரண்டாண்டுகளில் இந்தியாவில் அமெரிக்கா முதலீடு செய்துள்ளது.

● இந்தப் பரிவர்த்தனைகள் எல்லாவற்றுக்கும் மேலாக பாதுகாப்பு மற்றும் இராணுவத் துறை உறவுகள் ஏற்பட்டுள்ளன. அமெரிக்க இந்திய உறவுகளின் வரலாற்றில் முதன்முறையாக 1986 அக்டோபரில் அமெரிக்க இராணுவ மந்திரி காஸ்பார் வெயின் பெர்ஜர் இந்தியாவுக்கு வந்தது குறிப்பிட வேண்டிய மிக முக்கியமான அம்சம். இராணுவத் தளவாட உற்பத்திக்கான தொழில் நுட்பத்தை வளர்ப்பதற்கு கூட்டு சேருவதற்கானவாய்ப்புகளைக்கண்டறிய இராணுவ அமைச்சகத்தின் விஞ்ஞான ஆலோசகர் அருணாச்சலம் தலைமையிலான இராணுவத் தொழில்நுட்பக் குழு அமெரிக்கா போய்வந்தது. அதைத் தொடர்ந்து ஏராளமான உயர் அதிகாரிகள் போய்வந்தனர்.

● 1985க்கு முன்பு பாதுகாப்பு மற்றும் இராணுவக்கூட்டுறவு பற்றி நான் எழுப்பியிருந்தால் யாருமே முகம் கொடுத்திருக்க மாட்டார்கள். ஆனால் இன்று, அது பத்திரிக்கைகளில் நீண்ட கட்டுரைகளாக வருகின்றன; புது டெல்லி மற்றும் வாஷிங்டன் அரசு மாளிகைகளில் தொடர்ந்து விவாதிக்கப்படுகின்றன. இரண்டு அரசாங்க யட்டங்களிலும் விவாதிப்பதற்கு போதுமான ஆர்வமிருக்கிறது; அதைச் செயல் படுத்துவதற்கு போதுமான அரசியல் தீர்க்கமும் இருக்கிறது.

● இரண்டு நாடுகளின் பிரச்சினைகளை இப்போது இருசாராருமே நன்கு புரிந்து கொண்டுள்ளோம். அமெரிக்காவிலுள்ள இந்திய அதிகாரிகளைக் கொல்வதற்குச் சதி செய்த பயங்கரவாதிகள் தண்டிக்கப்பட்டார்கள். தளபதி வைத்யாவைக் கொன்ற இருவர் இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுகிறார்கள்.

● பல ஆண்டுகள் நடந்த பேச்சு வார்த்தைக்குப்பிறகு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதன்படி 132 கோடி ரூபாய் நிதியை டெல்லியுள்ள அமெரிக்க தூதரகம் வைத்துக் கொள்ளலாம். அறிவியல், தொழில்நுட்பம் கல்வி கலாச்சார கூட்டுறவை மேம்படுத்துவதற்காக அதைத் தூதரகம் செலவிடும்.

● கடந்த காலத்தில் இருந்ததைவிட அதிகமான விரிவான நடவடிக்கைகளில் இப்போது நாம் கூட்டுறவு கொண்டுள்ளோம். அதிமுக்கியத்துவம் வாய்ந்த இராணுவம், பயங்கரவாத எதிர்ப்பு வேலை, மற்றும் அதிநவீன தொழில் நுட்ப விவகாரங்கள் இப்போது புதிதாகச் சேர்ந்துள்ளன.

● உலக சமூகத்தில் அமெரிக்க மற்றும் இந்தியாவின் அந்தந்தப் பங்கு பாத்திரத்தினால் தடைப்பட்டுப் போகும் பிரச்சினையே எதுவுமே இல்லை. சரியான முறையில் அவற்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எதிர் மறையான விமர்சனக் குழப்பத்தில் நாம் மூழ்கிப் போகக் கூடாது."

அமெரிக்கத் தூதரின் மேற்கண்ட அறிவுரையைச் சிரமேற்கொண்டு மிகப் பெரிய கும்பலுடன் ஆடம்பரமாக அமெரிக்கா பறந்தார் ராஜீவ். ரீகனுடன் விசுவாசமான பல ஒப்பந்தங்கள் போட்டுவிட்டு "வெற்றிகர"மாகத் திரும்பினர். ருஷ்யஅடிருடிகளோ வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொள்கிறார்கள். திருடனுக்குத் தேள் கொட்டியதைப்போல முழிக்கிறார்கள்.

வெள்ளை மாளிகையின் தனிச் சிறப்பான விருந்தைத் தொடர்ந்து நடந்த இரண்டு மணி நேர ரீகன்—ராஜீவ் பேச்சு வார்த்தைக்கான நகல் "இந்தோ—அமெரிக்க உறவில் புதிய முன்முயற்சிகள்" என்கிற பெயரில் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்தது. இராணுவ கூட்டுறவு அதில் முக்கிய இடம்பெற்றிருந்தது. ரீகன் வழியனுப்பிய இறுதி உரையில் மிகவும் குறிப்பாக சொன்னது "தொழில் நுட்பம் மற்றும் பிற இராணுவத் துறைகளில் கூட்டு வைக்குமாறு இரண்டு நாடுகளின்



www.padippakam.com
படிப்பகம்

ஒப்பந்தம் முதற்தடவையாக அமைந்துள்ளது.'' அதன்படி விமானத்திலிருந்து குண்டுவீசுவதற்கான வழிகாட்டும் விமான அமைப்புமுறை இந்தியாவுக்கு விற்கப்படும். முதல் தரமான கவச வண்டி எதிர்ப்பு ஏவுகணைகள் இந்தியாவுக்கு விற்கப்படும். இந்தியா பல தடவை கோரியபடி அதிநவீன கம்ப்யூட்டர் இல்லாவிட்டாலும் இரண்டாம் நிலை இயந்திரங்கள் வழங்கப்படும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் காலில் எண்சாண் கிடையாக ராஜீவ் கும்பல் விழ்ந்ததற்கு அது சொல்லும் சமாதானம், இந்தியா—பாகிஸ்தான் பற்றிய அமெரிக்கக் கொள்கை மாறிவிட்டதாம்! ● இந்தியாவின் ஸ்திரத் தன்மையைச் சீர்குலைக்கும் நடவடிக்கையில் அதாவது ராஜீவ் ஆட்சியைக் கவிழ்க்கும் வேலையில் சி.ஐ.ஏ. ஈடுபடாது என்று அமெரிக்கத் துணை அதிபர் ஜியார்ஜ் புஷ் ராஜீவிடம் உறுதி கூறினாராம்! ● பாகிஸ்தானின் அணு ஆயுதத் தயாரிப்பு முயற்சிகள் சந்தேகத்துக்குரியனவாகத்தான் இருக்கிறதென்று அமெரிக்க இராணுவ அமைச்சகம் ஒப்புக் கொண்டதாம்! ● இந்துமா கடல் பிராந்தியத்தில்—தெற்கு ஆசியாவில்—இந்தியாவின் நியாயமான முக்கியத்துவத்தை அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளதாம்!

இவை அனைத்தும் பாசிச ராஜீவ் கும்பல் திரித்துச் சொல்லும் தகவல்கள்தாம்! முதலாவதாக, சி.ஐ.ஏ சதி; ராஜீவ் கும்பல் தனது கிரிமினல் குற்றங்கள் மற்றும் நெருக்கடிகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக கிளப்பிவிட்ட பூச்சாண்டி. மற்றபடி, மேலும் அமெரிக்க வலையில் ராஜீவ் கும்பலை இறுக்கிப் போடுவதற்கு சி.ஐ.ஏவானது பல ''பிளாக் மெயில்'' உருட்டல் மிரட்டல்களை எப்போதும் போல தொடங்குகிறது.

இரண்டாவதாக, ராஜீவ்—ரீகன் பேசி முடித்த 48 மணி நேரத்தில் ரீகனின் அணு ஆயுதக் கொள்கை ஆலோசகர் ரிச்சர்ட் கென்னடி அமெரிக்க நாடாளுமன்ற கமிட்டி உறுப்பினர்களைச் சந்தித்தார். 4000 கோடி ரூபாய்க்கு பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்குவது அடுத்த மாதத்திலிருந்து துவங்க இருக்கிறது; அதைக்குறைக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டார். இதுவும் பாகிஸ்தான் பற்றி எஜமானன் ரீகனிடம் ராஜீவ் கோள் சொன்ன சிலமணிகளில் நடந்திருக்கிறது.

மூன்றாவதாக, உலக சமாதானம், ஆயுதக் குறைப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, இன—நிறவெறி

www.padippakam.com




ராஜீவ் அமெரிக்க ஹார்வார்டு பல்கலைக் கழகத்தின் ''டாக்டர்'' பட்டத்துக்காக நாயாய் அலைகிறார்.

எதிர்ப்பு நிலைப்பாடுகள் காரணமாக ராஜீவைக் கவிழ்க்க வெளிநாட்டு பிற்போக்கு சக்திகள் சதிசெய்வதாக சொல்ஸி வந்தது. ஆனால் வான்கூவர் காமன்வெல்த் மாநாட்டில் பிரிட்டனுக்கு எதிராக ஆஸ்திரேலிய—நியூஜிலாந்து பிரதமர்கள் பேசிய அளவு ராஜீவ் பேசவில்லை. தாட்சருக்குத் துதிபாடும் வேலையே செய்தார். அமெரிக்காவுடன் இராணுவத்தளவாட உற்பத்தியில் கூட்டு, அதன் வளைகுடா போர் நடவடிக்கைகளுக்கு மறைமுக ஆதரவு, இந்து மாகடலில் டிகாகோ கார்சியாவில் அமெரிக்கத் தளத்தை எதிர்க்காதது ஆகிய ராஜீவின் சேவைகளுக்குப் பதிலாகத்தான் ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை அமெரிக்காவும் பிற மேற்கு ஏகாதிபத்திய நாடுகளும் ஆதரிக்கின்றன.

ஜெயவர்த்தனே மற்றும் ஜியாவுல்ஹக் போன்ற பலவீனமான குட்டி நாட்டு பாசிஸ்டுகளை மட்டும் நம்பியிருப்பதைவிட ராஜீவ் போன்ற இராணுவ ரீதியில் பலம் வாய்ந்த, பரந்து விரிந்த சந்தையும் மலிவான உழைப்புச் சக்தியும் நிறைந்த இந்தியாவின் பாசிச ராஜீவ் தனக்குச் சேவகம் செய்வதற்குத் தயாராய் இருக்கும்போது இந்த பிராந்தியத்தில் அதன் முக்கியமான பங்கு பாத்திரம் யுத்த வெறியன் ரீகனுக்குக் கசக்கவா செய்யும்.

தமிழகத்தில் ருஷ்ய அடிவருடிகள் பிரச்சாரம் செய்வதைப் போல பாசிச ஜெயவர்த்தனே முற்போக்கு ஜனநாயகவாதியாகி ஈழத்தமிழர்களின் நியாயத்தை ஏற்கவில்லை. அல்லது ராஜீவின் பலத்தை அங்கீகரித்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு விடவும் இல்லை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சார்பாக பாகிஸ்தானும் இஸ்ரேலும் இலங்கையில் செய்துவந்த அதே வேலையை இந்தியா செய்ய முன்வந்த போது ஏற்றுக் கொண்டார். வங்க தேசப் படையெடுப்பைத் தொடர்ந்து இந்திரா கும்பல் ருஷ்ய சார்பு நிலை எடுத்ததைப் போல இலங்கைப் படையெடுப்பு உதவும் என்று கோர்பசேவ் நம்பினார். ராஜீவுக்குத் தைரியமூட்டித் தனது இந்திய அடிவருடிகளின் ஏகோபித்த ஆதரவுடன் படையெடுக்கச் சொன்னார். ஆனால் அதன் பலன்களை அறுவடை செய்து கொள்ள வந்திருப்பதோ ரீகன்!

ருஷ்ய எஜமானனையும் மீறி ராஜீவுக்கு சேவகம் செய்யும் டி.ஆர்.ஆர், கரண்ஜியா, அக்பர் போன்றவர்கள் நியாயப்படுத்துவது போல யுத்தவெறியன் ரீகன் தனது கொள்கைகளை மாற்றிக் கொண்டு ராஜீவுடன் சமரசத்துக்கு வரவில்லை. பாகிஸ்தானை ஆயுத பாணி ஆக்குவது, வளைகுடாவில் அமெரிக்க ஏகாதிபத்திய அடாவடித்தனம், மற்றும் இராணுவக் கூட்டு உட்பட ரீகனின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு ராஜீவ்தான் அமெரிக்கக் காலடியில் வீழ்ந்து கிடக்கிறார்.

ஐந்து மாதங்களுக்கு முன்பு ஃபேர் ஃபாக்ஸ் தலைவர் மைக்கேல் ஹெர்ஷ்மேனையும் வி.பி. சிங்கையும் பற்றி, ''எந்த அந்நியனிடமிருந்தும் ஒழுக்கம் பற்றிய சான்றிதழ் நமக்குத் தேவையில்லை. அதனால் தனது சக்தியை ஊதிப் பெருக்கிக் கொள்ள விரும்புபவர்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறட்டும்'' என்று ஆத்திரத்துடன் தாக்கினார் ராஜீவ். அவர்தான் இன்று அமெரிக்க ஹார்வார்டு பல்கலைக் கழகத்தின் ''டாக்டர்'' பட்டத்துக்காக நாயாய் அலைகிறார். அதற்காக தனது கூட்டாளியான பெரும் தரகு முதலாளி இந்துஜா மூலம் கோடிகோடியாய் அந்தப் பல்கலைக்கழகத்துக்கு ''நன்கொடை'' வாரி வழங்கினார்.

இப்பொழுது தனது செல்வாக்கை ஊதிப்பெருக்கிக் காட்டுவதற்கான அவசியம் ராஜீவுக்கு ஏற்பட்டுள்ளது. அதேபோலத்தான் ரீகனுக்கும். ஏனெனில் ராஜீவ் இங்கே ஆயுதபேர ஊழல்களிலும் நெருக்கடிகளிலும் சிக்கித் தவிப்பதைப் போலவே, ரீகனும் ஈரான்—காண்ட்ரா ஆயுத விற்பனை ஊழல்களிலும் சர்வதேச பங்குச் சந்தை வீழ்ச்சியிலும் சிக்கிக் கொண்டுள்ளார். இரண்டு அரசியல் சீக்காளிகளுக்குள், இரண்டு யுத்த—ஆதிக்க வெறியர்களுக்குள் இப்போது விரிவான ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# ஊதாரிப்பிரதமரின் உல்லாசப்பயணம்

"ரோம் நகர் எரிந்து கொண்டிருந்தது. நீரோ மன்னன் தனது உப்பரிகையில் நின்று அதை ரசித்துக் கொண்டிருந்தான். சும்மா இல்லை. பிடில் வாசித்துக் கொண்டே ரசித்தான்" என்று வக்கிரத்தனத்துக்கு ஒரு கதை சொல்வார்கள்.

இலங்கையிலே, பாசிச ராஜீவ் கும்பலின் ஆதிக்க வெறியை நிறைவேற்றுவதற்காக ஈழத் தமிழர்களை இந்திய இராணுவம் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறது.

நடந்து முடிந்த நான்கு போர்களையும்விட அதிகமாக இந்திய இராணுவத்தினர் பலி கொடுக்கப்பட்டு வருகிறார்கள். நாள்ஒன்றுக்கு மூன்று கோடி ரூபாய் போர் அரக்கனுக்குத் தீனியாகக் கொட்டப்படுகிறது.

இந்தியாவில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் வறட்சியிலும் மீதிப்பேர் வெள்ளத்திலும் சிக்கி அல்லல் படுகிறார்கள். வரலாறு காணாத வறட்சிக்காக 560 கோடி புது வரி போடப்படுகிறது.

—இத்தனைத் துன்பங்களுக்கும் மத்தியில் இந்தியாவின் நீரோ மன்னன் ராஜீவின் வக்கிரத்தைப் பாருங்கள்! வட அமெரிக்கப் பயணத்துக்காக அவர் அடித்த ஆடம்பரக் கொட்டத்தைப் பாருங்கள். ஏற்கனவே அவரது லஞ்ச ஊழல் கிரிமினல் குற்றங்களுக்குச் சமமானது இது:

ஏர் இந்தியா விமானத்தில் சென்ற பிரதமர் ராஜீவ் காந்தி ஆடம்பரமான வசதிகளை அனுபவித்ததாக வியப்பூட்டும் விவரங்கள் தற்போது கிடைத்துள்ளன. உலகிலேயே கொழுத்த பணக்காரர்களில் ஒருவர் என்று கூறப்படும் புருனி நாட்டு சுல்தானைத் தவிர இதர அரசுத் தலைவர் எவரும் விசேஷ வசதி கொண்ட போயிங் 747 ரக விமானத்தில் மாநாட்டுக்கு வரவில்லை என்று தெரிகிறது.

ராஜீவ் காந்திக்கென ஒரு போயிங் 747 விமானம் மட்டும் காத்திருக்கவில்லை. மற்றொரு போயிங் 747 விமானம் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. ராஜீவ் சென்ற விமானத்தில் விசேஷ வசதிகள் செய்யப்பட்டிருந்தன. இதுமட்டுமின்றி குளிக்கும் சோப்பிலிருந்து சாதாரணமாக அவர் சாப்பிடும் உணவு பதார்த்தங்கள் வரை அனைத்துமே உலகம் முழுவதிலுமிருந்து சிறந்தவற்றை தேர்ந்தெடுத்து ஏர் இந்தியா வாங்கியிருந்தது.

விமானத்திலிருந்த விசேஷ படுக்கைகள் லண்டனில் பொருத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. துவாலைகள் சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்டன. படுக்கை விரிப்புகள் ரோமிலிருந்து வாங்கப்பட்டன. தலையணைகள் ஸ்விட்ஜர்லாந்து விமானங்களில் உள்ளது போன்று விசேஷமாகத் தயாரிக்கப்பட்டவை

பிரதமரின் அறை பட்டுப் பீதாம்பரத்தினால் அழகு படுத்தப்பட்டது; சுழல் நாற்காலிகள், தலை சாய்ந்து கொள்வதற்கு பட்டு உறைகளுடன் தனிச் சிறப்பாகச் செய்யப்பட்டன. எல்லாமே தனிச் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டன. புத்தகங்கள் வைப்பதற்கான அடுக்குகள், பெயர் ஒட்டிகள், ஏர் இந்தியா வழக்கமாகப் பிரசுரிக்கும் "நமஸ்கார்" பத்திரிக்கைக்குப் பதில் பிரதமருக்காக விசேசமாக அச்சிட்ட ஏடு, சுமைகளுக்குத் தனிபட்டு குஞ்சங்கள், விமானத்திலேயே மாநாட்டு அறை, அதற்கென்று தனியான எழுது பொருட்கள் ஆகிய அனைத்தும் தனிச் சிறப்பாகத் தேடிப் பிடித்து ஏற்பாடு செய்யப்பட்டன.

உணவு மற்றும் மதுபானங்கள் குளிர் பானங்களுக்கான மேஜை விரிப்புகள் மிக மென்மையான வெள்ளைத்துணிகள் வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டுமின்னின. பளிங்கினால் கன கண்ணாடி டம்ளர்கள், பிரதமருக்காக மிகவும் விலை உயர்ந்த ராயல் டவுல்டன் என்கிற சீன பீங்கான் பாத்திரத்தில் பரிமாறப்பட்டது. வெள்ளிக்கரண்டி வெள்ளி முள் கத்தி, வெள்ளி வளையங்கள் பிரதமர் மற்றும் மிக முக்கிய புள்ளிகளுக்காகத் தரப்பட்டன.

அனைத்து சோப்புகளும் வாசனை திரவியங்களும் கழிப்பறைக்குத் தேவையான பொருள்களும் சிங்கப்பூரிலிருந்து கொண்டு வரப்பட்டன. இனிப்புகளும் இதர சிற்றுண்டிகளும் ஜப்பான் நாட்டுப் பொருள்களாகும்.

பிரதமருக்கு விசேஷ வசதிகள் செய்துதருவது தொடர்பாக விரிவான திட்டம் ஒன்றை ஏர் இந்தியா நிறுவனம் தீட்டியிருந்தது. அது 61 பக்கங்கள் கொண்டதாக இருந்தது. இது விமானத்துக்குள் செய்து தரப்பட வேண்டிய வசதிகளாகும். இதனை ஏர் இந்தியாவின் திட்ட மற்றும் நடைமுறைகள் இலாகாவின் மானேஜர் ஏ.ஏ.கோல்கோ வெளியிட்டிருந்தார். இதன் நகல்களை நடவடிக்கைக்காக பம்பாய், புது தில்லி, டோக்கியோ, பிராங்க்பர்ட், வான்கூவர், பாஸ்டன் மற்றும் வாஷிங்டனுக்கு அவர் அனுப்பியிருந்தார்.

பிரதமரின் உணவு வகைகளில் மிக உயர்ந்த வெண்ணை, சாக்லேட்டுகள் முதலியன இடம் பெற்றிருந்தன. உணவு வகைகள் பற்றிய விவரம் மெல்லிய பட்டுத் துணி, இறக்குமதி செய்யப்பட்ட காகிதம் மற்றும் வெள்ளித் தகடுகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

ஏழு கடல்களையும் தாண்டிக் கிடைக்கக்கூடிய உணவுப் பட்டியலோடு சிவாஸ் ரீகல், பிளாக்லேபிள் ஆகிய விஸ்கி வகைகள், வோட்கா, பகார்டி, ரம், மற்றும் ஃபிரெஞ்சு பிராந்திகள் ஆகியவை உட்பட மிகச்சிறந்த உயர்தர வெளி நாட்டு மதுபானங்கள் 87 புட்டிகள் ஏர் இந்தியா நிறுவனத்தால் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

டண்ஹில், ரோத்மான்ஸ், பென்சன் அண்டு ஹெட்ஜஸ்மற்றும் ஸ்டேட் எக்ஸ்பிரஸ் போன்ற உயர்தர சிகரெட்டுகள் எண்பது பெட்டிகளில் குவிக்கப்பட்டிருந்தன.

எது எது வேண்டுமோ அதை எடுத்துக் கொள்வதற்காக குளிர் பானங்கள் இருந்தன. ஆனால் உள்நாட்டில் தயாரித்த கெம்பா கோலா அல்லது லிம்கா அல்லது கோகோ கோலா, பெப்சி கோலா, பிட்டர் லெமன், மினரல் வாட்டர், செவன் அப் ஆகிய வெளிநாட்டு உயர் வகை குளிர்பானங்கள் கொண்டு வரப்பட்டன.

தில்லி-டோக்கியோ பயணத்தின் போது பிரதமருக்கு அளிக்கத் தயாராக இருந்த காலைச் சிற்றுண்டியில், தேர்ந்தெடுக்கப்பட பழரசங்கள், புத்தம் புதிய பழங்கள், வேகவைத்த முட்டைகள், கோழி சூப், ஆட்டுக்கால் சூப், மென்மையான தோசை (சட்னி, சாம்பாருடன்),

# ராஜீவின் ஆடம்பர செலவுகள்



படிப்பகம்

www.padippakam.com

தக்காளி சூப், நெய்விட்டு மென்மையாக வறுக்கப் பட்ட ரொட்டித் துண்டுகள். சினை மீனின் கருவை யெடுத்து நெய்யில் வறுத்தது; இனிப்புத் தயிர், பூண்டு வகை முட்டை, பாதி வேக வைத்த முட்டை, இளம் ஆட்டுக் கொத்துக் கறி, பழப் பாகு, சூடான சாக்லேட், உருளைக் கிழங்கு வருவல், பொறியல், பசியெடுக்கவும் ஜீரணிக்கவு பழ வகைகள். வெண்ணெய், ஜாம், தேன், ஜிலேபி, டீ, காபி முதலியன இடம் பெற்றிருந்தன.

ஃபிராங் ஃபர்ட்—டெல்லி திரும் பும் வழியில் மேற்கண்ட வையுடன் நெய்யில் சுட்ட பூரி, பப்படம், பாஸந்தி, புலவு, கோழி வருவல், வெண்ணை கலந்த மொச்சைக் கொட்டை வகைகள், பல வகை ரொட்டிகள், சூப்புகள் உட்பட 32 வகை வெளிநாட்டு உணவுப் பொருட்கள் பிரதமரின் உணவுக் காகத் தயாரித்து தரப்பட்டன.

இதேபோல் மதிய உண வுக்கும் எண்ணிக்கையிலடங் காத உணவுப் பண்டங்கள் காத்திருந்தன. டீ, காபி தவிர உயர் வகை 'பான் மசாலாக் களும்' தருவிக்கப்பட்டிருந் தன. அந்த விமானத்தில் பய ணம் செய்தவர்களுக்கு விலை மதிப்புள்ள பரிசுப் பொருள்கள் அளிக்கப்பட் டன.

பிரதமருடன் கூடப் பயணம் செய்த பத்திரிக்கையாளர்கள், அதி காரிகளுக்கு 6 வகை சிறு பெட்டி களும், தனித்தனி ஜிவென்சி எனப் படும் பெட்டியும் பரிசாகத் தரப்பட் டன. அவற்றில் ஒரு பட்டுத் துணிப் பை, பிளாக் லேபிள் விஸ்கி அரைப் புட்டி, ஸ்டேட் எக்ஸ்பிரஸ் சிகரெட் ஒரு பெட்டி, ஒரு சாக்லெட் பாக் கெட், ஒரு காந்தப் பெட்டி, சோப்பு மற்றும் இதர வாசனைத் திரவியங் கள் அடங்கிய பெட்டி போன்றவை இருந்தன.

தமிழகத்தின் 'தினத்தந்தி' சார் பாக அதன் பத்திரிக்கையாளர் என்கிற பொறுப்பில் பிரதமருடன் ஊர்சுற்றி வந்தவர், சிவசங்கரி!

பிரதமரின் பயணத்துக்கு சுமார் 15 கோடி ரூபாய் செலவாகியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில், வழக்கமாகச் செல்லும் இரண்டு போயிங் 747 விமானங்களை வாபஸ் பெற்றுக் கொண்டு அவற்றுக் குப் பதிலாக வாடகை விமா னங்களை பணியில் ஈடுபடுத் திய செலவும் அடங்கும். ●

# சாதியா? தகுதியா?

## தலைமை நீதிபதி சந்துர்கர்- சட்ட மந்திரி பொன்னையன் லடாய்!

தமிழக உயர்நீதி மன்றத்தில் காலியாக உள்ள நீதிபதி பதவி களுக்கு நீதிபதிகளை நியமிக்கும் விஷயத்தில் தமிழக தலைமை நீதிபதி சந்துர்கருக்கும் சட்ட அமைச்சர் பொன்னையனுக்கும் இடையே நடந்து வந்த 'பனிப் போர்', இன்று அப்பட்டமான சாதிய சண்டையாக உருவெடுத்து நாறுகிறது.

தமிழ்நாடு உயர்நீதி மன்றத் தில் ஆறு நீதிபதிகளுக்கான பதவி கள் நிரப்பப்படாமல் காலியாகவே இருந்து வருகிறது. ஒருவரை புதி தாக நியமிப்பார்கள். சில மாதங் களில் வேறொருவர் பதவிக்காலம் முடிந்து மீண்டும் காலியிடம் தொட ரும். நீண்ட காலமாக இதே நிலை மைதான் நீடிக்கிறது.

தலைமை நீதிபதி சந்துர்கர் ஐந்து பேரை நீதிபதி பதவிக்கு சிபாரிசு செய்திருந்தார். இதில் இரு வர் நீதிபதியாக நியமிக்கப்பட்டு விட்டார்கள். மற்ற மூவர் பற்றி தான் இப்போது பிரச்சினை. அடுத்து சந்துர்கர் சிபாரிசு செய் திருந்த நான்கு பேரும் பிராமணர் கள். "தமிழக மண் வாசனைக்கு இதை ஏற்க முடியாது" என்று வெளிப்படையாக பத்திரிகை களுக்கு பேட்டியளித்து எதிர்க் கிறார் பொன்னையன்.

'முன்பு 13 உயர்நீதிமன்ற பதவிகள் காலியாக இருந்தது இதில் 8 பேரே நியமிக்கப்பட்டுள் ளனர். மீதி இடம் காலியாக உள் ளது. மொத்தமுள்ள 19 தமிழக உயர் நீதிமன்ற நீதிபதிகள் 9 பேர் உயர்சாதியினர். இதில் மூவர் பார்ப் பனர்கள். இதற்கு மேலும் பார்ப் பனர்களை நியமித்தால் தமிழகம் கொதிப்படையும்' என்று எம்பிக் குதிக்கிறார் பொன்னையன். இது பற்றி எம் ஜி ஆரும் 'தமிழகத்தின் மண் வாசனைக்கேற்ப' நீதிபதி களை நியமிக்கக் கோரி பிரதம ருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இதற்கிடையே தலைமை நீதி பதி சந்துர்கர், "நீதிபதி பதவிகள் தகுதி-திறமை-அனுபவம் ஆகிய வற்றின் அடிப்படையில்தான் நிய மிக்கப்படுகிறது. சாதிய பிரதிநிதித் துவத்தைக் கோருவது அபத்த மானது. நீதித்துறையை அரசியல் சேற்றில் தள்ள முயற்சிப்பது வேத னைக்குரியது" என்று வெளிப் படையாக பேசினார்.

எரிச்சலடைந்த பொன்னை யன் "இனி புதிய முறையைக் கையாள அ தி மு க அரசு முடிவு செய்துள்ளது. தமிழக அரசே நான்கு பிற்படுத்தப்பட்ட—தாழ்த் தப்பட்ட வகுப்பினர் பெயர்களை நீதிபதி பதவிக்கு சிபாரிசு செய்ய முடிவு செய்துள்ளது" என்று பேட்டியளித்தார்.

இதில் வேடிக்கை என்னவென் றால், நீதிபதிகள் நியமன விஷயம் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதா என்றால் இல்லை. மாநில தலைமை நீதிபதி—மாநில அரசு — கவர்னர்—உச்ச நீதிமன்றத்தின்

எம்ஜிஆரும் தலைமை நீதிபதி சந்துர்கரும்





படிப்பகம்

www.padippakam.com

தலைமை நீதிபதி—இவர்களைக் கலந்தாலோசித்து மத்திய அரசு தான் நியமிக்க வேண்டும். மாநில அரசின் சம்மதம் பெற்றுத்தான் நியமிக்க வேண்டும் என்பதில்லை.

'தமிழக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சந்துர்கர், மத்திய சட்ட அமைச்சர் பரத்வாஜ், இந்திய தலைமை வழக்கறிஞர் பசுராம் ஆகியோர் பார்ப்பனர்கள். அவர்கள் தமிழகத்திலும் நீதித்துறையில் பார்ப்பன ஆதிக்கத்தை நிறுவ முயற்சிக்கிறார்கள். எங்கள் காலத்தில் அது ஒருபோதும் நடக்காது' என்று சூளுரைக்கிறார் பொன்னையன்.

'சந்துர்கர் பரிந்துரைத்தவர்கள் அனைவரும் பிராமணர்கள் என்பது உண்மைக்குப் புறம்பானது. முன்பு தலைமை நீதிபதியாக இருந்த கே. பி. என். சிங் சிபாரிசு செய்த பெயர்கள் அவை. மேலும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, எம்ஜிஆரை சந்திக்க சந்துர்கர் பலமுறை முயற்சித்தும் முதல்வர் நேரம் ஒதுக்கவில்லை. எனவே சந்துர்கர் மீது குற்றம் சாட்டுவது சரியல்ல' என்று வழக்கறிஞர்களும் சில பார்ப்பன பத்திரிக்கைகளும் சூடேற்றுகின்றன. பிரபல வழக்கறிஞர் பாளை. சண்முகம் தனது மனித உரிமைக் கவுன்சில் சார்பில் பொன்னையனின் 'மண்வாசனை'யை எதிர்த்து கூட்டம் நடத்தினார். திராவிடர் கழகமோ தமிழக அரசின் பார்ப்பன எதிர்ப்பு கொள்கையை ஆதரித்து உயர்நீதிமன்றம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தியது. இப்படியாக, உயர்மட்டத்தில் நடந்து கொண்டிருந்த இந்த விவகாரம் வெளியே வந்து சந்திசிரிக்கிறது.

ஏற்கனவே பொன்னையன் 'மண்வாசனைக்கு' ஏற்ப சட்டத்துறை செயலாளர் வடிவேலுவை நீதிபதியாக்க கடுமையாக முயற்சித்தார். அவரை நீதிபதியாக்கக் கூடாது என்று வழக்கறிஞர்கள் பிப்ரவரி 19ந்தேதி கோர்ட்டுகளைப் புறக்கணித்து போராட்டம் நடத்தினர்.

சட்டத்துறை செயலாளர் வடிவேலு சட்டத்தில் பட்டம் பெற்றவர். ஆனால் கருப்பு கோட்டுடன் கோர்ட்டுக்குச் சென்று வழக்காடியவரல்ல. அவர் ஏற்கனவே அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். அதன்பின் எம்ஜிஆர் அரசு அவருக்கு பதவி நீட்டிப்பு கொடுத்துள்ளது. அவருக்கு வயது 61. உயர்நீதிமன்ற நீதிபதிகள் அறுபத்திரண்டு வயதுவரைதான் பதவி வகிக்க முடியும். இந்நிலையில் ஒரு வருடம் மட்டுமே பதவி வகிக்கும் தகுதி பெற்ற வடிவேலுவை நீதிபதியாக நியமிக்க தமிழக அரசு பிடிவாதம் காட்டுவதற்கு காரணம் இல்லாமவில்லை.



"தம்ழக மண வாசனைககு இதை ஏற்க முடியாது" என்று எதிர்க்கிறார் பொன்னையன்.

1980லிருந்து சட்ட இலாகா அமைச்சர் பொன்னையனுக்கு 'அனுபவசாலி'யான வடிவேலுவின் ஆதரவு தேவைப்பட்டது. அதன் பிறகு இருவரும் இணைபிரியாத இரட்டையர்கள் ஆனார்கள். எம்ஜிஆர் அரசு சாராய லைசென்ஸ் ஊழலில் மாட்டிக் கொண்டபோது, அதை விசாரிக்க ராம்பிரசாத்ராவ் கமிஷன் நியமிக்கப்பட்டது. மத்திய சட்ட அமைச்சராக இருந்த ஏ.கே. சென் அரசு தரப்பில் அன்று ஆஜரானார். ஏ.கெ. சென்னை வடிவேலு நன்றாக கவனித்துக் கொண்டார். பின்னர் கமிஷன் தீர்ப்பு எம்.ஜி.ஆர் அரசுக்கு சாதகமாக அமைந்தது. இதற்கு நன்றிக்கடனாக அவரை நீதிபதியாக்குவதென்று பொன்னையனும், எம்ஜிஆர் அரசும் தீவிரம் காட்டுகிறார்கள்.

மத்திய அரசு அதிகாரிகளின் பிரச்சினைகளை விசாரிக்க தனி டிரிப்யூனல் செயல்படுவது போல, மாநில அரசு அதிகாரிகளின் விவகாரத்திற்காக மாநில அரசு தனி டிரிப்யூனல் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று சென்ற ஆண்டு சட்டம் வந்துள்ளது. ஆனால் எம்ஜிஆர் அரசு இன்னும் இதை ஏற்படுத்தவில்லை. உயர்நீதிமன்ற நீதிபதியோ அல்லது ஓய்வு பெற்றவரோ இந்த டிரிப்யூனலுக்குத் தலைவராக முடியும். டிரிப்யூனலின் தலைவர் 65 வயது வரை பணியாற்றலாம். எனவே வடிவேலுவை நீதிபதியாக்கி டிரிப்யூனல் தலைவராக நியமித்துவிட்டால் அவர் 65 வயது வரை பணியாற்ற முடியும் என்பதாலேயே பொன்னையன் இதில் முனைப்பாக நிற்கிறார்.

அதாவது, தகுதி—திறமை—அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் நீதிபதிகளை நியமித்து நீதித்துறையின் 'புனித'த்தைக் காக்க வேண்டுமென்பது வழக்கறிஞர்களின் வாதம். அரசியலை சாதி மத பிராந்தியவாத சக்திகளுக்கு அடிபணிய வைத்தது போல நீதித்துறையும் அரசாங்கத்தையும்நடத்த' வேண்டுமென்பது ஓட்டுப்பொறுக்கிகளின்வாதம். அரசாங்க சன்மானங்களையும் பதவிகளையும் பகிர்ந்து கொள்வதற்காக சாதிய சக்திகளின் மிரட்டலுக்கு அடிபணியாமல் அவர்களால் அரசாங்கத்தை நடத்தவும் முடியாது. இதை உசுப்பிவிட்டு தாழ்த்தப்பட்டவர்கள் பிற்பட்டவர்கள் நீதிபதியாகவோ அரசுத் துறையில் உயரதிகாரியாகவோ இருந்தால் அவர்கள் அந்த சமூகத்துக்கு சேவை செய்வார்கள் என்று சாதிய சங்கங்கள் பிரமையூட்டுகின்றன.

முன்பு திருமதி பத்மினி ஜேசுதுரை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டபோது தமிழக வரலாற்றிலேயே முதன்முதலாக ஒரு பெண் நீதிபதியாகி விட்டார்; பெண்ணுரிமையும் சமத்துவமும் நிலைநாட்டப் பட்டு விட்டது என்று பெரிய அளவில் கூப்பாடு போட்டார்கள். இதேபோல வரதராசன் முன்பு டெல்லி உச்சநீதிமன்ற நீதிபதியாக்கப்பட்டபோது ஒரு தமிழர், அதிலும் தாழ்த்தப்பட்டவர் நீதிபதியாகிவிட்ட அருமை பெருமைகளை அடுக்கினார்கள்.

நியமிக்கப்படும் இந்த நீதிபதிகள் எள்முனை பிளந்தாற்போல நீதி வழங்குவார்கள் அல்லது பெண்களின் தாழ்த்தப்பட்டவர்களின் நலன் காப்பார்கள் என்பதற்காக இந்தப் பதவி தரப்படவில்லை—இவர்கள் ஆட்சியிலுள்ளவர்களுக்கு காட்டிய விசுவாசத்திற்கு கிடைத்த பரிசுதான் இது. இவர்களின் விசுவாசம் எங்கிருக்கிறது என்பதை அறியாமல், இவர்களின் பிறப்பை—சாதியைப் பார்த்து ஏமாறச் சொல்கிறார்கள். இந்த நிறுவனங்களில் இருந்து கொண்டு யாருக்கு சேவை செய்கிறார்கள் என்பதை விட்டு விட்டு தமிழர்களை—தாழ்த்தப்பட்ட - பிற்பட்டவர்களை நீதிபதியாக்குங்கள் என்று திராவிடக் கட்சிகள் அரசாங்க சலுகைகள் சன்மானங்கள் என்ற எலும்புத் துண்டுகளைக் கவ்விக் கொள்வதற்கான போட்டியில் நாயாய் அலைகின்றன.

தகுதி அடிப்படையிலானாலும், சாதிஅடிப்படையிலானாலும் இரண்டிலுமே ஒரு போதும் உழைக்கும் மக்களுக்கு நீதி கிடைத்துவிடப் போவதில்லை. மக்களுக்கு சாதகமாக வழங்கப்பட்ட தீர்ப்புகள்கூட அதிகாரவர்க்கத்தால் கிடப்பில் போடப்படுகின்றன. எனவே இந்த நிறுவனங்களாலும், அதில் நியமனம் பெறுபவர்களாலும் உழைக்கும்மக்களுக்காக ஒன்றும் செய்ய முடியாது. உழைக்கும் மக்கள் இவற்றுக்கு எதிராவும், குறிப்பாக சாதிய சூழ்ச்சிகளுக்கு இரையாகாமலும் விழிப்போடிருந்து முறியடிக்க வேண்டும்.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# புதிய ஜனநாயகத்துக்கு தஞ்சை குரவபுலம் பண்ணையின் மிரட்டல்

"இன்னும் ஒருவாரத்துக்குள் மன்னிப்புக் கேள்! அத்துடன் மான இழப்புத் தொகையாக ஒரு லட்ச ருபாய் கொடு!" என்று மிரட்டி தஞ்சைக் குரவபுலம் பண்ணை வீராச்சாமித் தேவர் "புதிய ஜனநாயகம்" ஏட்டிற்கு வக்கீல் நோட்டீசு விட்டிருக்கிறார்.

ஏனெனில், சென்ற மாதம் "புதிய ஜனநாயகம்" ஏட்டில் வெளியிட்ட "தஞ்சைக் குரவபுலம்—மாஃபியா குண்டர்களின் பிடியில்..." என்கிற செய்திக் கட்டுரையால் அவருக்கு ஏறத்தாழ குறைந்தபட்சம் பத்துலட்சம் மான இழப்பு ஏற்பட்டுவிட்டதாம்! இந்தியத் தண்டனைச் சட்டம் 2[illegible]0, 500, 503 முதல் 507ன்படி குற்றமாகிறதாம்!

வழக்கமாக இந்த மாதிரி விவகாரங்களில் "மன்னிப்புக் கேள்! இல்லையானால் மான நட்ட வழக்குத் தொடுப்பேன்!" என்றுதான் மிரட்டுவார்கள். இவரோ மன்னிப்போடு உடனடியாக ஒருலட்சம்ருபாயும் தர வேண்டுமென்கிறார்! இல்லையானால் வழக்குத் தொடுப்பதோடு "புதிய ஜனநாயகம்" இதழுக்குக் கொடுத்துள்ள வெளியிட்டு அங்கீகாரத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுப்பாராம்!

தஞ்சைக் குரவப்புலம் பண்ணை சரியான பேராசைக்காரர்! அத்தோடு அதிகாரத் திமிர் பிடித்தவர் என்பது தெரிகிறது. அவருக்கு ஒன்று சொல்வோம்: லட்சத்தை நாங்கள் கண்ணாலும் பார்த்ததில்லை. அவர் லட்சமென்ன கோடி கோடியாய் பணத்தைத்திரட்டப் புறப்பட்டவர். புதிய ஜனநாயகமோ லட்சமென்ன கோடி கோடியாய் மனிதர்களைத் திரட்டப் புறப்பட்டிருக்கிறது!

குரவப்புலம் பண்ணை ஒரு காங்கிரசுப் பிரமுகர், பணபலமும், குண்டர் பலமும் மிக்கவர்; அதிகார வர்க்கமும் போலீசும் அவருடைய பக்கபலம்! இவற்றை வைத்துக்கொண்டு ஏராளமான உப்பளத் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாகவும், அந்த வட்டார ஏழை, எளிய மக்களை உருட்டி மிரட்டியும் கொள்ளையிடுபவர். அதே போல "புதிய ஜனநாயகத்"தையும் மிரட்டிப் பணிய வைக்க முயலுகிறார். துரோகிகளால் தலைமை தாங்கப்படும் தொழிலாளர்கள் மற்றும் நிராதரவான அப்பாவி கிராம மக்களைப் போன்று அடக்கி விடலாம் நினைக்கிறார்.

ஆனால் புதிய ஜனநாயகமோ நாட்டில் ஒரு மார்க்சிய—லெனினிய இயக்கத்தைக் கட்டியெழுப்பப் புறப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இதன்மீது பாய்ந்த, தென்னகத்திலேயே பெரிய தரகு அதிகார முதலாளி டி.வி.எஸ் இப்போதைக்குப் பின்வாங்கிக் கொண்டார். இப்படிப்பட்ட பண்ணையார்கள், தரகு அதிகார முதலாளிகளின் ஆதிக்கத்தை வீழ்த்தி உழைக்கும் மக்களின் அதிகாரத்துக்காகப் போராடுவதுதான் "புதிய ஜனநாயக"த்தின் லட்சியம். தராசு, ஜூனியர் விகடன் போன்று முதலாளிகளின் லாபத்துக்காக நடத்தப்படுவது அல்ல. எனவேதான் விதியை நொந்து கொண்டு, அரசிடம் மன்றாடிக் கொண்டு சமூக அக்கிரமங்களைச் சொல்லி வெறுமனே புலம்புவதோடு நிற்கவில்லை. மக்களுக்கு ஆக்கபூர்வமான வழிகளைச் சொல்லுகிறோம்.

எனவே இன்றைக்கு இந்த சமூக விரோதக் கும்பலை— அதன் கூட்டாளிகளை முறியடித்து வெற்றி பெற மட்டுமல்ல, நாளைய விடுதலையைச் சாதிக்கவும் அவசியமென்பதற்காக சமூக விரோதச் செயல்களை அம்பலப்படுத்தி, "பாதிக்கப்பட்ட மக்களை அணி சேர்த்து தாக்குதலிலிருந்து தற்காத்துக் கொள்ள, திருப்பித் தாக்க ஆயுத பாணியாக்கிக் கொள்வது" பற்றி புதிய ஜனநாயகத்தில் எழுதியிருந்தோம். கிரிமினல் புத்தியுடைய பண்ணையும், அவருடைய வக்கீலும் "தாக்குதலிலிருந்து தற்காத்துக் கொள்ள" என் வார்த்தைகளை மறைத்துவிட்டு அவரது கட்சிக்காரையும் நண்பர்களையும் கூண்டோடு அழித்து முறியடிக்கப்பட வேண்டும் என்று கண்டிருப்பதாக சில வார்த்தைகளைத் திட்டமிட்டு வலியச் சேர்த்து நோட்டீசு விட்டிருக்கிறார்கள்.

எம்ஜிஆர், வீரமணி போன்றவர்கள்தமது கட்சித் தொண்டர்களைப் பார்த்து தற்காப்பிற்காக கத்தி வைத்துக் கொள்ளுங்கள் என்று பகிரங்கமாகத் தூண்டி விடுகிறார்கள். ஆனால் குரவப்புலம் பண்ணையின் குண்டர்படையினால் தொலைபேசி ஊழியர் ராஜாராம் ராவ் தாக்கப்பட்டு கொலை மிரட்டலுக்கு ஆளானார். இந்தச் செய்தியை வெளியிட்ட "புதிய ஜனநாயகத்"துக்கு நோட்டீஸ் விடுவதற்கு முன்பு தகவல் கொடுத்ததாக நாம் குறிப்பிட்டிருந்த அதிராம்பட்டினம் இமயவரம்பனை அந்தப் படை தேடியிருக்கிறது. ஏற்கனவே குரவபுலம் நடராஜ தேவர், முத்தையா தேவர், வடிவேலுத் தேவர் போன்ற அப்பாவி மக்களை மிரட்டி அவர்களது நிலத்தை எழுதி வாங்கிக் கொண்டு ஊரை விட்டே விரட்டியிருக்கின்றனர்.

இந்நிலையில் தொழிலாளர்களும் விவசாயிகளும் சமூக விரோதத் தாக்குதலில் இருந்து தற்காத்துக் கொள்ள ஆயுத பாணியாகிக் கொள்ளச் சொல்வது மட்டும் துவேச உணர்ச்சியைத் தூண்டி விடுவதாகுமாம்! அதனால் மக்கள் மத்தியில் கொந்தளிப்பும் பொது அமைதி இழப்பும் ஏற்பட்டு விட்டதாம்! குரவபுலம் பண்ணையின் குண்டர்படை ஆதிக்கத்தின் கீழ் மக்கள் வாய் பொத்தி மெய்யடக்கி அடிமைகளாக வாழும் அமைதி கெட்டு, எங்கே கொந்தளித்துவிடப் போகிறார்களோ என்று பயந்து "புதிய ஜனநாயகத்"துக்கு மிரட்டல் விடுவதுதான் இந்த வக்கீல் நோட்டீசு.

குரவபுலம் பண்ணைக்கும், "தொலைபேசியில் உள்ளவருக்கும் உள்ள கருத்து வேறுபாடுகளும் கலகம் குறித்தும்" வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது; தவறு செய்தவர் யார் என்று நீதிமன்றம் முடிவுக்கு வரும்; இந்த நிலையில் வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையைபடம்எடுத்துப் பிரசுரித்து நீதிமன்ற அந்தரங்கங்களை திருடி அதை விலை பொருளாக்கி விட்டோம்; இது நீதிமன்ற வரம்புகளை மீறுகின்ற குற்றமாகும்—என்று வேறு மிரட்டியுள்ளார்.

தாக்கப்பட்ட தொலைபேசி ஊழியருக்கும் இவருக்கும் கருத்து வேறுபாடுகள் (!) என்று அந்தக் காங்கிரசுப் பிரமுகர் ஒட்டுப் பொறுக்கி அரசியல் பாணியிலேயே முலாம்பூசுகிறார். வழக்கு முடிவுக்கு வரும் முன்பே அதுபற்றி எழுதியது குற்றமென்றால் அன்றாடப் பத்திரிக்கைகளைப் பாருங்கள். கொலை, கொள்ளை, கடத்தல் போன்ற பல விவகாரங்களிலும் "குற்றவாளி பிடிபட்டான்" என்று போலீசாரே செய்தி கொடுத்து வெளியிடுகிறார்களே அதற்கு மட்டும் உரிமை உண்டா? இராணுவ இரகசியங்கள் முதற்கொண்டு ஏராளமான அரசு ஆவணங்கள் வெளிவந்து குரவபுலம் பண்ணையின் அரசியல் கட்சி தலைவரே—பிரதமரே— சந்தி சிரிக்கும்போது இரகசியமே அல்லாத, பகிரங்கமாக வெளியிடப்படும் முதல் தகவல் அறிக்கை நீதிமன்ற அந்தரங்கம் என்றும், திருடி நீதிமன்ற வரம்பு



படிப்பகம்

www.padippakam.com

களை மீறிவிட்டோம் என்று பண்ணையும் அவரது வக்கீலும் மிரட்டுகிறார்கள்.

"புதிய ஜனநாயகம்" வெளியிட்ட செய்தி தரக் குறைவானது என்றும் "அதை உண்மை என்று நிலை நாட்டவும், அதன் விளைவுகளை சந்திப்பதற்குத் தெம்பும், துணிவும் இருக்க வேண்டும்" என்றும் ஆசிரியருக்கு எச்சரிக்கை விடுவித்துள்ளனர். குரவபுலம் பண்ணை வீராசாமித் தேவர் மற்றும் அவரது கூட்டாளிகளின் ஆதிக்கம் மற்றும் முறைகேடான வழிகளில் ஏராளமான சொத்துக்களைச் சேர்த்தது பற்றிய குற்றச் சாட்டுகளை அவரது குண்டர்படை ஆதிக்கத்தின்கீழ் மிரண்டு போயுள்ள அந்த வட்டார மக்கள் சார்பாக புதிய ஜனநாயகம் முன்வைக்கிறது.

கொள்ளையில் ஒரு மா நிலமும், ஒரு வீட்டு மனைக் கட்டும் மட்டுமே பூர்வீக சொத்தாகப் பெற்றிருந்த வீராசாமி தேவர் பலருடைய நிலத்தை மிரட்டி எழுதி வாங்கி உள்ளார். 50 ஏக்கர் உப்பளத்துக்கு உடமையாளர். மீன், உப்பு, பூ, புகையிலை வியாபாரத்தில் ஆதிக்கம். இதற்கெல்லாம் கடத்தல் தொழிலே ஆரம்ப மூலாதாரமாக இருந்தது. கடத்தலில் வேதாரண்யம் வெங்கிடாச்சலத் தேவரின் அடியாளாக இருந்து, பிறகு தனியாக நடத்தியுள்ளார். கடத்தலிலே இவருக்கும் வெங்கிடாச்சலத் தேவரின் மகன்களுக்கும் தகராறு ஏற்பட்டு அடிதடி அளவு போயுள்ளது.

காங்கிரசுக் கட்சிப் பிரமுகர்கள் என்கிற முறையில் தாம் நிரபராதிகள் என்பதை மக்கள் மன்றத்தில்தான் அவர்கள் நிரூபிக்க வேண்டும். ஆனால் நீதிமன்றத்தை அவர்கள் தெரிவு செய்துள்ளார்கள். பண ஆதிக்கம் அங்கே பாதாளம் வரை பாயும் என்று நம்புகிறார்கள். கீழ் வெண்மணியில் 44 தாழ்த்தப்பட்ட மக்களை உயிரோடு கொளுத்தி விட்டு நீதிமன்றத்தில் போய் தப்பித்துக் கொண்ட இரிஞ்சூர் கோபாலகிருஷ்ண நாயுடு வழிதான் இவர்கள் வழி! மாறாக, கீழ் வெண்மணி விவகாரத்தைப்போல பண்ணையாரின் அட்டூழியங்களை மக்கள் மன்றத்திற்கு எடுத்துப் போகும் புரட்சியாளர்களின் வழிதான் "புதிய ஜனநாயக"த்தின் வழி!

—ஆசிரியர் குழு புதிய ஜனநாயகம்

# புரட்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேறுவோம்!

அன்பார்ந்த வாசகத் தோழர்களே!

உங்கள் கரங்களில் தவழும் புதிய ஜனநாயகம் இந்த இதழிலிருந்து மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

புதிய ஜனநாயகப் புரட்சியின் பிரச்சாரகன்—அமைப்பாளன் என்ற முறையில்,

மார்க்சிய — லெனினிய—மாசேதுங் சிந்தனையின் ஒளியில், சமுதாயப் பிரச்சினைகளை ஊடுருவி ஆராய்ந்து, அதற்கான காரணங்களையும் தீர்வுகளையும் முன்வைத்து, அவற்றை நிறைவேற்ற போராட்ட அறைகூவல் விடுக்கும் பொறுப்புமிக்க பணியில் எங்களை அர்ப்பணித்துக் கொண்டோம்.

புற்றீசலாகப் புறப்பட்டு வரும் வியாபாரப் பத்திரிக்கைகளே வெளிவந்து மூன்று மாதங்களுக்கு மேல் மூச்சுவிட முடியாமல் திணறி முடங்கிவிடும்போது, லாப நோக்கின்றி 'குறைந்த விலையில்' இந்நாளில் அரசியல் பத்திரிக்கை நடத்துவதென்பது இடர்பாடுகளும், துன்ப துயரங்களும் மிக்க ஒரு கடுமையான போராட்டம்தான். இருப்பினும், லட்சியத்தின் மீதுள்ள வேட்கையாலும், உங்களின் உறுதியான ஒத்துழைப்பாலும் அனைத்தையும் வென்று வருகிறோம்.

எதிரிகளாலும் துரோகிகளாலும் எவ்வளவுதான் இடர்ப்பாடுகள் வந்தாலும் இம்மியளவும் பணியாமல் தொடர்ந்து உறுதியுடன் இந்த லட்சியப் பாதையில் முன்னேறுவோம் என்று மீண்டும் பிரகடனப்படுத்துகிறோம். இந்தப் புரட்சிகரப் பணியில் எங்களுக்குத்தொடர்ந்து ஆதரவளிக்கவும் இணைந்து செயலாற்றவும் உங்களை அறைகூவி அழைக்கிறோம்.

மூன்றாமாண்டில் அடியெடுத்து வைக்கும் புதிய ஜனநாயகத்துக்கு நேரிலும் தபால்.மூலமாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்த அனைத்து தோழர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர் குழு






படிப்பகம்

www.padippakam.com

## அரசு விரயம் ஆண்டுக்கு 20,000 கோடி ரூபாய்

சென்ற இதழில் அரசு விரயமாக ஆண்டுக்கு 20,000 கோடி ரூபாய் பாழாக்கப் படுவதை விளக்கி எழுதியிருந்தோம். 'விரயமாவது நடக்கத்தான் செய்கிறது. ஆனால் இதைக் கட்டுப்படுத்த தணிக்கை அதிகாரியும் பாராளுமன்றக் கமிட்டியும் உள்ளது. எனவே இதைச் சீர்திருத்த விட முடியும்' என்கின்றனர், ஆட்சியாளர்கள். ஆனால் இது அதிகாரவர்க்கத்தின் ஊதாரித்தனத்தைத் திறமையாக மூடிமறைக்க ஆட்சியாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைப்புதான். எல்லா விசாரணைக் கமிஷன்களைப் போலவே பாராளுமன்றக் கமிட்டியும் தணிக்கைக் குழுவும் மக்களை ஏய்க்க ஆட்சியாளர்களும் எதிர்க்கட்சியினரும் சேர்ந்தே நடத்தும் பித்தலாட்ட நாடகம்தான்!

# கண்காணிப்புக்கு ஒரு கையாலாகாத கமிட்டி

"ஒவ்வொரு அரசாங்க கோப்பிலும் ஒரு மோசடி பதுங்கியிருக்கிறது. தில்லுமுல்லுகளும் விரயமும் ஊழலும் திட்டமிட்டே மறைக்கப்படுகிறது!"—இது ஏதோ எதிர்க்கட்சிகள் சாட்டும் குற்றச் சாட்டல்ல; அல்லது பத்திரிக்கைகளின் சாடலுமல்ல. அரசாங்க கணக்குகளை தணிக்கை செய்யும் அதிகாரிகளே இப்படிக் கூறுகின்றனர்.

வெள்ளையர்கள் நம்மை அடக்கி ஆண்ட காலத்தில் அரசு செலவு ஆண்டுக்கு ரூ 260 கோடியாக இருந்தது. 1947ல் 'சுதந்திர' மடைந்தபோது அது ரூ 610 கோடியானது. இப்போதைய 'சேமநல அரசு' செலவிடுவதோ ஆண்டுக்கு ரூ 58,500 கோடி. 1986—87ல் இது ரூ 73,000 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. மக்களுக்குச் சேவை செய்வது என்பதன் பெயரில் அதிகார வர்க்கம் பூதாகரமாகப் பெருத்துப் போய் பெருமளவு நிதியை விழுங்கி விடுகிறது. இதற்கும் மேலாக ஆண்டுக்கு ரூ 20,000 கோடி விரயமாக்கப்பட்டு பாழடிக்கப்படுகிறது. அரசின் தணிக்கை அதிகாரிகளே இந்த உண்மையை ஒப்புக் கொள்கின்றனர்.

பொதுக் கணக்கு தணிக்கைக்கான பாராளுமன்றக் கமிட்டித் தலைவர் அய்யாபு ரெட்டியின் கூற்றுப்படி, பட்ஜெட்டில் குறைந்தது 10 சதவீதத் தொகையாவது விரயமாக்கப்பட்டு மூன்றாவது நபரின் கைக்குப் போகிறது. அதாவது ராணுவச் செலவில் ஏறத்தாழ பாதியளவு தொகை ஆண்டு தோறும் விரயமாக்கப்படுகிறது.

பொதுக் கணக்கு கமிட்டியின் முன்னாள் தலைவர் சதிஷ் அகர்வால் கூற்றுப்படி எல்லா அரசுத் திட்டங்களும் வரையறுக்கப்பட்ட திட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டால் இந்தியா பற்றாக்குறை பட்ஜெட் போடவேண்டிய அவசியமே இல்லை.

இப்படி பலவழிகளிலும் விரயமாவதைத் தடுக்க வேண்டாமா? உண்மையில் எவ்வளவு தொகை விரயமாக்கப்பட்டுள்ளதுஎன்பதைத் துல்லியமாக கண்டறிந்து உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டாமா? எனவேதான் தணிக்கை அதிகாரி அலுவலகம் வைத்து அனைத்து கணக்குகளையும் தணிக்கை செய்து முறைப்படுத்துகிறோம் என்று ஆட்சியாளர்கள் சப்பை கட்டுகிறார்கள்.

பாசிச இந்திராவும் அவரது கையாளும்,செயலாளருமான யஷ்பால் கபூரும் சேர்ந்து அரசு வாகனங்களைத் தமது கட்சியின் தேர்தல் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தியதை தணிக்கை அதிகாரிகள் கண்டறிந்தனர். இந்தக் குற்றச் சாட்டை ஆதாரமாகக் காட்டி இந்திராவின் தேர்தல் வெற்றி செல்லாது என்று அலகாபாத் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனால் இந்திய அரசியலிலே பெரும் மாற்றம் ஏற்பட்டு அவசர நிலை பிறப்பிக்கப்பட்டது. இந்த அளவுக்கு திறமையும் முக்கியத்துவமும் வாய்ந்த அமைப்பு இது என்று தணிக்கை அதிகாரிஅலுவலகத்தை ஏற்றிப் போற்றுகிறார்கள்.

இவ்வளவு அதிகாரத்தைக் குவித்துக் கொண்டு தணிக்கை அதிகாரியும், கீழதிகாரிகளும் செயல்படும்போது ஏன் ஊழலும் விரயமும், ஊதாரித்தனமும் நாடு முழுவதும் தலை விரித்தாடுகிறது?

எப்படி ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டு பிரச்சினை திசை திருப்பப்படுகிறதோ அது போலத்தான் தணிக்கை அதிகாரி அலுவலகமும் செயல்படுகிறது. அதிகார வர்க்க ஊழல் கலாச்சாரத்தில் இந்த அமைப்பு மட்டும்சரியாக இயங்கிவிட முடியும் என்று நம்பச் சொல்கிறார்கள். அரசுத் துறை அதிகாரிகளும் தணிக்கை அதிகாரிகளும் சாதாரணமாகவே ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் குடித்து கும்மாளமடிக்கின்றனர். கீழ்மட்ட அதிகாரிகளும் ஊழியர்களும் பிரச்சினைக்குரிய தணிக்கை அறிக்கைகளையே அரசுத்துறை அதிகாரிகளுக்கு ரகசியமாக விற்கின்றனர்.

அரசு அலுவலகங்கள் சமர்ப்பிக்கும் கணக்கு அறிக்கைகளில் பொது மக்களிடமிருந்து வரும் புகார்கள் எதிர்க்கட்சியினரதுமுறையீடுகள் ஆகியனவற்றை தணிக்கை அதிகாரிகள் திட்டமிட்டே புறக்கணிக்கின்றனர். 'விவாதிக்கப்பட்டது; எனவே விவகாரம் கைவிடப்படுகிறது' என்று குறிப்பு எழுதிவிட்டு அதிகார வர்க்கத்தின் பொய்க் கணக்கை கையூட்டு பெற்றுக் கொண்டு அப்படியேஅங்கீகரிக்கின்றனர்.

இப்படி தணிக்கை அதிகாரிகளே அரசின் ஊழலுக்கும் ஊதாரித்தனத்துக்கும் உடந்தையாக இருந்தால் அதைக் கண்காணித்து முறைப்படுத்துவது யார்? 'அதற்காகத்தான் பொதுக் கணக்குக்கான பாராளுமன்றக் கமிட்டியை நிறுவியுள்ளோம்' என்கிறார்கள் ஆட்சியாளர்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆளுங்கட்சி உறுப்பினர்களும் பங்கேற்கும் இந்தக் கமிட்டி ஈராண்டுகளுக்கு ஒரு முறை நிறுவப்படும். இக்காலத்தில் அது தணிக்கை அறிக்கைகளைப் பரிசீலிக்கும். புகார்கள், முறையீடுகளைக் கவனத்தில் கொண்டு குறைபாடுகளைக் கண்டறியும் என்று அரசு செலவுகளைக் கண்காணிக்க உயர்மட்ட அமைப்பை நிறுவியுள்ளதாக காட்டுகிறார்கள்.

கத்தரிக்காய் கணக்குகூட தெரியாத எம்.பி.க்கள், பட்ஜெட் கணக்கிலிருந்து ஒவ்வொரு அரசு செலவுகளையும் அலசி ஆராய்வார்களாம்! கேழ்வரகில் நெய் வடிகிறதாம்! நம்பச் சொல்கிறார்கள். நிறுவப்படும் பாராளுமன்றக் கமிட்டிகள் எல்லாமே, எம்.பிக்கள் சிறப்பு அலவன்சு பெற்றுக் கொண்டு உல்லாச கேளிக்கை விருந்துகளில் கும்மாளமடிப்பதற்கான ஒரு ஏற்பாடுதான் என்பது ஊரறிந்த ரகசியம். வெளிநாடுகளுக்குச் சென்று பாராளுமன்ற நடவடிக்கைகளைக் கண்டறிந்து வர ஒரு கமிட்டி, மேற்கத்திய நாடுகளின் நீர்ப்பாசன முறைகளை கற்றறிந்து வர ஒரு கமிட்டி இந்தியைப் பரப்ப ஒரு கமிட்டி—இப்படி ஏதாவது ஒரு பெயரில் பாராளுமன்றக் கமிட்டி நிறுவிக் கொண்டு கட்சி பேதமின்றி ஆளுங்கட்சி எதிர்கட்சி உறுப்பினர்கள் உல்லாசமாக வெளிநாடுகளுக்கு குடும்பத்துடன் சென்று வருவதும், கொழுத்து திரிவதும் அவர்களது வாடிக்கை. இந்த லட்சணத்தில் பொதுக் கணக்குகளைப் பரிசீலிக்கும் பாராளுமன்றக் கமிட்டி மட்டும் ஒழுங்காகச் செயல்படுமா என்ன?

ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங்தெரு சைதாப்பேட்டை, சென்னை—600015
அச்சிடுபவர்: பிரேம் பிரஸ், 107-A பெரியார் பாதை(மேற்கு) சென்னை—600094.

படிப்பகம்

www.padippakam.com

தணிக்கை அலுவலர்களால் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான புகார்கள், மறுப்புகள் முன்வைக்கப்படுகின்றன. இவைபலமட்டங்களில் சிதைக்கப்பட்டு ஏறத்தாழ 2000 பிரச்சினைக்குரிய கணக்குகளே மத்திய தணிக்கை அலுவலகத்துக்கு அனுப்பப்படுகிறது. இங்கேயும் பல வழக்குகள் வெட்டப்பட்டு 400 மறுப்புகளே பாராளுமன்ற பொதுக்கணக்கு கமிட்டிக்கு அனுப்பப்படுகிறது. இதில் அதிக பட்சம் 20 விவகாரங்களையே பாராளுமன்றக் கமிட்டி பரிசீலிக்கிறது!


“குறுகிய காலத்திற்குள் இதனைப் பரிசீலனை செய்வது இயலாது. உண்மையில் எங்கள் முயற்சிகள் தோல்வியில்தான் முடிந்தது” என்கிறார் பாராளுமன்றப் பொதுக்கணக்கு கமிட்டியின் தலைவராக இருந்த அய்யாபு ரெட்டி. இவர் சட்டம் படித்த காங்கிரஸ்காரர். எம்.பி. ஆவதற்குமுன் ஆந்திராவில் அஞ்சையா மந்திரி சபையில் சட்ட மந்திரியாக இருந்தவர். “இரண்டாண்டு காலத்திற்குள் அனைத்தையும் பரிசீலிப்பது என்பது இயலாத காரியம். நான் பல மாதங்களாக நள்ளிரவு 2 மணி வரை வேலை செய்தேன். தணிக்கை அறிக்கையிலிருந்து சில பகுதிகளை மட்டும் எடுத்துக் கொண்டு நாங்கள் ஆராய்ந்தோம். இதுவே பெரிய வேலையாகி விட்டது. ஒரு எம்.பி க்குரிய மற்ற பிற வேலைகளை எங்களால் கவனிக்கவே முடியவில்லை” என்று அங்கலாய்க்கிறார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் கடந்த 40 ஆண்டுகளில் தணிக்கை அதிகாரிகளால் மூடி மறைக்கப்பட்ட ஊழல்கள், பொய்க் கணக்குகள் பற்றி பாராளுமன்றக் கமிட்டி எந்த விசாரணையும் நடத்தியதேயில்லை. இத்தனைக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும்போதே அதன் லட்சணம் இப்படியிருக்கிறது. இத்தனைக்கும் மேலாக பாராளுமன்றக் கமிட்டி கண்டறிந்த ஒன்றிரண்டு விவகாரங்களேகூட அதிர்ச்சியூட்டக் கூடியதாக உள்ளது.

பாதுகாப்புத் துறையில் உள்ள ஆயுதத் தளவாடத் தொழிற்சாலைகளில் 15 சதவீதம் மட்டும் செயல்படுகின்றன. மீதி 85 சதவீதம் திறன் இருந்தும்கூட முடங்கிக் கிடக்கின்றன. தேவையான உற்பத்தி அனைத்தும் தனியாருக்குக் காண்ட்ராக்ட் விடப்படுகிறது. அரசு நிறுவனத்தில் உற்பத்தியை நிறுத்திவிட்டு தனியாருக்கு கொடுப்பது ஏன் என்று பாராளுமன்றக் கமிட்டி விளக்கம் கேட்டபோது ராணுவ அதிகாரிகள் அதிசயமானதொரு விளக்கம் அளித்தார்கள்.

‘நாளை நாம் ஒரு யுத்தத்தில் ஈடுபடும்போது நமக்கு ஏராளமான ஆயுதங்கள் அவசரமாகத் தேவைப்படும். அதை ஈடு செய்ய இந்த ஆயுதத் தளவாட தொழிற்சாலைகளின் திறன் போதாது. எனவே தனியார் துறையிடம் உதவி கோர நேரிடும். ஆனால் அவர்களுக்கு இது நாள் வரையில் இத்துறையில் பயிற்சி இல்லாவிட்டால் அவர்களால் எப்படி உற்பத்தி செய்யமுடியும்? எனவேதான் இப்போதிருந்தே சிறுசிறு ஆர்டர்கள் கொடுத்து அவர்களை உற்பத்தியில்ஈடுபடுத்தி பயிற்சி அளிக்கிறோம். நாளை நாம் ஒரு யுத்தத்தில் ஈடுபடும் போது இவர்களை முழு அளவில் முடுக்கி விடலாம் அல்லவா?’ என்று தமது செயலுக்கு ‘தேச பக்தி’யோடு விளக்கம் அளித்தார்கள்.

பாராளுமன்றக் கமிட்டியும் ‘தேசநலன்’ கருதி அந்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டது. பிறகு ஒரு ரகசிய சுற்றறிக்கை பாராளுமன்றக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. அதன்படி ‘கொள்கை மற்றும் தேச முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் தேவையில்லாமல் தலையிட வேண்டாம்’ என்று கேட்டுக் கொண்டது. ஒரு வழியாக தணிக்கைக் குழு மற்றும் பாராளுமன்றக் கமிட்டியின் கைகள் கட்டிப் போடப்பட்டன. தணிக்கைக்குழு, கணக்குகளை தணிக்கை செய்யும்; பாராளுமன்றக் கமிட்டி அதை ஒருமுறை மேலோட்டமாகப் பார்வையிடும்; அதற்கு மேல் ஒன்றும் செய்யக்கூடாது என்பது மரபாகிவிட்டது.



பாதுகாப்புத் துறையில்ராணுவ ஜீப்புகளும் லாரிகளும் உபயோகத்துக்கு சர்வசாதாரணமாகவிடப்படுகின்றன. வட்டிக்கடை சேட்டுக்களைப்போல, இரண்டு ‘லாக்’ புத்தகங்கள் வைத்துக் கொண்டு பொய்க் கணக்கு காட்டுகின்றனர். இந்த மோசடிகளை பாராளுமன்றக் கமிட்டியினர் அறிந்தேதான் இருக்கிறார்கள். ‘தணிக்கை அதிகாரிகளின் ஆலோசனையும் உதவியுமில்லாமல் இப்படி மோசடி செய்யவே முடியாது’ என்று அங்கலாய்க்க முடிந்ததே தவிர அவர்களால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

ஒரு பெரிய அரசுத்துறை நிறுவனம் அலுவலகத் தேவைக்காக (அதிகாரிகளின் சொந்தஉபயோகத்துக்குத்தான்) என்று தனியார் டாக்சிகளை மாதக் கணக்கில் வாடகைக்கு அமர்த்திக் கொண்டு பல லட்சக்கணக்கான ரூபாய்களை வீணடிக்கிறது. நீர்வள அமைச்சகத்தின் கீழுள்ள ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தின் மைய அலுவலகம் பரீதாபாத்தில் நிறுவப்பட்டுள்ளது. ஆனால் பிரதான பொறியாளர்களும் அதிகாரிகளும் தங்கள் வசதிக்காக டெல்லியில் ஒரு அலுவலகத்தை வைத்துக் கொண்டு பொதுப் பணத்தைப் பாழக்கிறார்கள். கேரளத்தில் அமைச்சர்களும் அதிகாரிகளும் அரிசி பேரத்தில் 10 கோடி ருபாய்க்கு பொய்க் கணக்கு காட்டி சுருட்டியதை தணிக்கை அதிகாரிகள் அறிந்தும்கூட குற்றம் சாட்டவில்லை. இதுபோல கிராமப்புற மக்களுக்கென ஒரு லட்சம் வீடு கட்டும் திட்டத்திற்குஒதுக்கப்பட்ட தொகை அனைத்தும் அதிகாரிகளாலும் காங்கிரசு குண்டர்களாலும் ஏப்பம் விடப்பட்டதை அறிந்தும் கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. —இப்படி பல உண்மைகளை கடந்த காலத்தில் பாராளுமன்றக் கமிட்டி கண்டறிந்து அரசுக்கு சமர்ப்பித்தது. ஆனாலும் இதுவரை யார்மீதும் குற்றம் சாட்டப்படவில்லை. எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவுமில்லை.

ஆக, அரசு செலவினங்களை மேற்பார்வையிடும் தணிக்கைக் குழுவும், பாராளுமன்றக் கமிட்டியும் கையாலாகாத பொம்மைகள்தான். மக்களது அதிருப்தியை திசை திருப்ப ஆட்சியாளர்களும் எதிர்க்கட்சியினரும் சேர்ந்தே நடத்தும் பித்தலாட்டம்தான். மக்களுக்கு அந்நியமான புல்லுருவியான, வேண்டாத சதைப் பிண்டமான அதிகார வர்க்கத்தையும், அதன் ஊதாரித்தனத்தையும் இந்தக் கமிட்டிகளால் ஒரு போதும் கட்டுப்படுத்த முடியாது. தனிவகை சாதியாக வளர்ந்துவிட்ட இந்த கும்பலைத் தூக்கியெறிவதைத் தவிர வேறு வழியில்லை.

● மனோகரன்.



படிப்பகம்


www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா

இதோ இந்த வரைபடம், ஒவ்வொரு மாநிலத்திலும் வறுமைக் கோட்டிற்குக் கீழாக உள்ள மக்கள் தொகைக்கு அரசே கொடுத்த புள்ளி விவரம். ஏழு ஐந்தாண்டுத் திட்டங்கள், எண்ணிலடங்கா வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள் இவை யனைத்தையும் மீறி இந்த அவலம் தொடர்கிறது.

ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் 6,400 ரூபாய்க்கு மிகாமல் இருந்தால் அவர்கள் வறுமையில் உழல்பவர்கள் என்பது அரசு கணக்கு. ரு 4800க்கும் கீழே இருந்தால் அவர்கள் மிகவும் நலிவடைந்தவர்கள். இவர்களை வறுமைக் கோட்டுக்கு மேலே உயர்த்த, அதாவது ஆண்டுக்கு 6,400 ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைக்க வழி செய்ய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தை (IR DP) முடுக்கி விட்டார்கள். இத்திட்டத்தின் மூலம் கொடுத்த கடன்களால், இந்த ஆண்டின் துவக்கத்தில் முதல் மூன்று மாதங்களில் மட்டும் 59 சத வீத மக்களை வறுமைக்கோட்டுக்கு மேலே இழுத்து விட்டதாக பெருமைப்பட்டுக் கொண்டார்கள்.


இதை சோதனை செய்ய 27 தனியார் மாதிரி ஆய்வு நிறுவனங்களை களத்தில் இறக்கி விட்டார்கள்.




இந்தியா முழுவதும் ஒவ்வொரு மாதமும் தெரிவு செய்யப்பட்ட 36 மாவட்டங்களில் கடனுதவி பெற்ற 1440 பேரிடம் விபரங்கள் சேகரிக்கப்பட்டன. அதில் 70 சதவீத மக்கள் முழுமையாக பழைய தரித்திர நிலையிலேயே இருந்தார்கள். மீதியுள்ளோர் ஆண்டுக்கு 500லிருந்து 1000 ரூபாய் வரை வருமானம் பெறும் நிலையில் இருந்தார்கள். இவர்கள்கூட இன்னும் இரண்டு ஆண்டுகளில் இன்னும் மோசமான நிலைக்குத் தள்ளப்படுவார்கள். ஆக, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் பலன் பூஜ்ஜியம்தான் என்று நிரூபிக்கப்பட்டது.

இதோ, இந்த வரைபடம் இந்தியாவின் முக்கிய நகரங்களில் ரூபாயின் மதிப்பு உண்மையில் எவ்வளவு என்பதை விளக்குகிறது. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக ரூபாயின் மதிப்பு 18 பைசாவுக்கும் கீழே போய் செல்லாக்காசாகி விட்டதைக் காட்டுகிறது. அதாவது விலைவாசி பன்மடங்கு உயர்ந்துள்ளதை தெளிவாக்குகிறது.

ஒருபுறம் 70 சதவீத மக்கள் வறுமைப் படுகுழியில்; மறுபுறம் விண்ணைமுட்டும் விலைவாசி; இதுதான் 40 ஆண்டுகால 'சுதந்திர' இந்தியாவின் சாதனை. வெற்று வாக்குறுதிகளையும் காகிதத் திட்டங்களையும் காட்டி மக்களை ஏய்த்து சாவின் விளிம்பிற்கே தள்ளிய இந்த மக்கள் விரோத ஆட்சியை இன்னும் எத்தனை நாட்கள்தான் சகித்துக் கொண்டிருப்பது?




படிப்பகம்